குருபாதம்

# ஞானசம்பந்தம்

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 30 ] சாதாரண ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10–12–70 [ இ



ஸ்ரீ அமிர்தகடேசுவரர்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

இன்னவினை இன்னதலத்
  தின்னபொழு தின்னபடி
இன்னதனுல் எய்தும்
  எனஅறிந்தே—அன்னவினை
அன்னதலத் தன்னபொழு
  தன்னபடி அன்னதனுல்
பின்னமறக் கூட்டும்
  பிரான். (94)


ஆசிரியர் :

வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்



உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"


தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 30 | 10-12-70 | இதழ் 1


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | புத்தாண்டு வாழ்த்து | 1 |
| 2 | தீபார்ச்சனை | 3 |
| 3 | ஞானசம்பந்தம் - புத்தாண்டு | 8 |
| 4 | தோத்திரமும் சாத்திரமும் | 10 |
| 5 | "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்" | 17 |
| 6 | திருவையாற்றுப் பதிற்றுப்பத் தந்தாதி | 21 |
| 7 | அண்ணாமலை என்னும் அற்புதம் | 25 |
| 8 | திருமந்திரம் - குறிப்புரை | 27 |
| 9 | ஆழ்வார் அழகநுபவம் | 31 |
| 10 | காசியாத்திரை அனுபவங்கள் | 36 |
| 11 | Studies in Saiva Siddhanta | 41 |
| 12 | சிவாகம ஸார ஸர்வஸ்வம் | 41 |
| 13 | திருவருட்பயன் விளக்க உரை | 45 |
| 14 | செய்திகள் | 50 |
| 15 | எதிர்காலம் | 51 |
| 16 | சித்த வைத்திய சாலை | 54 |
| 17 | "ஞானசம்பந்தம்" இருபத்தொன்பதாவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம் | 1 |

" ஞானசம்பந்தம் " இதழைத் தொடங்கியருளிய



தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருபாதம்

## " ஞானசம்பந்தம் "

# புத்தாண்டு வாழ்த்து

இருபத்தொன் பானுண்டாய் எழிலோடு நடையிட்டு
ஒருமித்த பாராட்டில் ஒளிர்கின்ற தமிழேடு !
திங்கள் ஒருமுறைதான்; பொங்கிவரும் பெருநிலவு;
எங்கள் குருமணியின் எண்ணம்வளர் பூக்காடு!
தங்கத் தமிழ்மொழியின் தாழ்வகற்றி வையகத்தில்
எங்கும் அறிவுஒளி ஏற்றுகின்ற நல்விளக்கு !
ஊனசம் பந்தம் உயிர்பற்றி நிற்கையிலே
ஞானசம் பந்தம் நடைபோடத் தொடங்கியது!
சாத்திரம் ஒன்றல்ல; சத்தான தமிழ்பிறந்த
தோத்திரங்கள் அத்தனையும் துலக்குகின்ற பெரும்பணி
கயிலைக் குருமணியின் காணரிய பேரருளில் [யில்
சயிலம் என எழுந்து சமயத்தின் பெருந்தூணாய்
ஆண்டுக்கு ஆண்டு அற்புதங்கள் பலதாங்கி
வேண்டும் சிறப்பினங்கள் விளைகின்ற பூக்காடாய்
கடல்கடந்த நாடெல்லாம் களித்து மகிழ்ந்திருக்க
அடல்ஏருய்ப் புகழீட்டி அருள்வளர்க்கும் திங்களிதழ் !
அன்புப் பெரும்பணியில் அமைதியுடன் நடைபோடும்
இன்பத் தமிழேடு எண்ணரிய புதுமையுடன்
புத்தாண்டில் அடிவைத்து மெத்தச் சிறப்புடனே
எத்திசையும் புகழ்மணக்க எழுச்சியுடன் வருகிறது !
போற்றித் தமிழ்வளர்க்கும் பொன்னான நல்லேட்டை
ஏற்றுச் சிறந்து இன்புறுக மக்களெலாம் !

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

தருமை ஆதீனத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் " ஞானசம்பந்தம் " இம்மாத இதழோடு இருபத்தொன்பது ஆண்டு நிறைவைப் பெறுகிறது.

இதுவரை, தமிழுலகிலும் தமிழர்வாழும் கடல் கடந்த நாடுகளிலும் சமயத்துறையில் ஒரு விழிப் புணர்ச்சியை உருவாக்கியது ஞானசம்பந்தம் என்பதை அனைவரும் அறிவர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் அருளுரை, புத்தம்புதிய சமய, இலக்கிய, இலக்கணக் கட்டுரை கள், செய்திகள், எதிர்காலம் முதலியவற்றுடன் படிப்பவர் பயனுறும் வகையில் வெளிவரும் ஞானசம்பந்தம் இதழைத் தொடர்ந்து அன்பர்கள் வாங்கி ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

30—11—70 ஆம் தேதியுடன் ஞானசம்பந்தம் இதழின் ஆண்டு முடிவுறுவதால் தனி அறிவிப்பை எதிர்பாராமல் பழைய சந்தாதாரர்கள் மீண்டும் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும் புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக்கட்டணம் அனுப்பியும் " ஞானசம்பந்தம் " இதழைப் பெற்றும் கற்றும் பயனுறுவார்களாக.

ஆண்டுச் சந்தா

உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமையாதீனம்
தருமபுரம், மாயூரம் P. O.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | சாதாரண – கார்த்திகை – 10–12–70 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தீபார்ச்சனை

'அர்ச்சனை' என்பதை நாம் இறைவனை அவனது திருப் பெயர்கள் பலவற்றைச் சொல்லி மலர்தூவும் செயல் ஒன்றையே குறிக்க வழங்கிவருகின்றோம். ஆயினும், அஃது அச் செயல் ஒன்றற்கே சிறப்பான பெயரன்று. இறைவனுக்கும் நாம் செய்யும் வழிபாட்டுச் செயல் அனைத்திற்கும் பொதுப் பெயரே. திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருப்பாசுரத் திற்கு முறையாகக் கருத்துரைத்துவரும் இடத்தில் சேக்கிழார், "வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக" என்றதன் கருத்தை விளக்குமிடத்தில்,

" வேள்வி நற்புனல் வீழ்புன லாவது
நாளும் அர்ச்சனை நல்லுறுப் பாதலால்
ஆளும் மன்னனை வாழ்த்தியது அர்ச்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால் "

என்று கூறுகின்றார். இங்கு 'அர்ச்சனை' என்பது 'வழிபாடு' என்னும் பொதுப்பொருளே தந்துநிற்றல் வெளிப்படை.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புன்கூர்த் திருப்பதிகத்தில், சிவபெருமானைத் தேவர், அசுரர், மக்கள், விலங்குகள், ஊர்வன முதலிய பல உயிர்களும் வழிபட்டு நன்மை பெற்றமையைப் பினவருமாறு குறிப்பிடுகின்றார்.

இயக்கர் கின்னரர் யமனொடு வருணன்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

இங்கும் 'அர்ச்சித்தார்' என்பது பொதுவாக, 'வழிபட்டவர்' என்றே பொருள்தருதல் காணலாம்.

" எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனஉரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தார்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து "

என்ற இடத்தில் சேக்கிழார், 'பூசனை, அர்ச்சனை' என்ற இரு சொற்களையும் ஒருபொருள் உடையனவாகவே கூறியிருத்தல் 'அர்ச்சனை' என்பதன் பொருளை நன்கு விளக்குவதாகும். அப்பைய தீட்சிதர் தாம் இயற்றியுள்ள சிவபூசா விதிக்கு, 'சிவார்ச்சனா சந்திரிகை' எனப் பெயரிட்டிருத்தல் கருதத் தக்கது. இவற்றாலெல்லாம் 'அர்ச்சனை' என்பது வழக்கத்தில், குறிப்பிட்ட ஒருசெயலுக்குப் பெயராக வழங்கப்பட்டாலும்

உண்மையில் அது, 'வழிபாடு' என்னும் பொதுப்பொருளைத் தருவது என்பது தெளிவாகின்றது

இனிப் பிற்காலத்தில் 'திருச்சிற்றம்பல நாவலர்' எனப் பெயர்பெற்ற புலவர் ஒருவர் அர்ச்சனை' என்பதை அபிடேகம்' என்னும் பொருளில் வழங்கியுள்ளார். அஃது இது பொழுது நினைக்கத்தக்கதாய் உள்ளது

'திருச்சிற்றம்பல நாவலர் சிறந்த சிவநூற் பயிற்சியும், சைவ சமயப் பற்றும் உடையவர்' என்பதை அவரது பெயரே காட்டுகின்றது. அவர் இயற்றியது அண்ணாமலைச் சதகம்' என்ற ஒரு சிறுநூல். பிற்காலப் புலவர்கள் இதுபோலச் செய்த சிறுநூல்களில் பெரும்பொருள்கள் பலவற்றைப் பலரும் எளிதில் அறிந்துகொள்ளச் சொல்லிவைத்துள்ளனர். அந் நூல்களைப் படித்தால் அவற்றின் அருமை விளங்கும். அத் தகைய சிறுநூல்களைப் படிக்கும் வழக்கம் இக்காலத்தில் அறவே நீங்கிவிட்டது. திருச்சிற்றம்பலக் கவிராயர் தாம் இயற்றியுள்ள அண்ணாமலைச் சதகத்தில் சிவாகமப் பொருள் கள் பலவற்றை எடுத்துக் கூறியதோடு சில இடங்களில், 'அஃது இன்ன ஆகமத்தில் உள்ளது' என்பதையும் குறிக் கின்றார். அதனால், சிவாகமங்கள் பலவற்றைப் படித்து அரிதில் தெரியவேண்டிய பொருள்கள் பலவற்றை மேற் குறித்த நூலில் எளிதில் அறிந்துகொள்ளலாம். அவற்றுள் ஒன்று சிவாலயங்களில் மாதந்தோறும் பௌர்ணிமை நாளில் நிகழ வேண்டிய அபிடேக வகைகளைக் குறிப்பிட்டுக் கூறுவது.

சித்திரை முதல் பங்குனி ஈறாக உள்ள பன்னிரண்டு மாதப் பௌர்ணிமைகளில் முறையே மருக்கொழுந்து, சந்தனம், முப்பழச் சாறு, சர்க்கரை, அதிரசம், காச்சிய பால், அன்னம், தீபம், வெண்ணெய் தேன், நெய், தயிர் என்பவற்றால் சிவாலயங்களில் சிவபெருமானுக்கு அபிடேகம் செய்வித்தல் வேண்டும் என்பது ஆகம விதி என்பதை அந்நூல் பின் வருமாறு தெரிவிக்கின்றது;

வருடாதி சித்திரைத் திங்கள்பூ ரணைநாள்
மருக்கொழுந் தபிடேகமாம்;
வைகாசி சந்தனம தானியில் பலாப்பழம்
மாங்கனிக் கதலிக்கனி

கருதாடி சர்க்கரைநல் ஆவணியில் அதிரசம்
காணும் புரட்டாசியில்
காய்ச்சிய திரட்டுபால் ஐப்பசிக் கன்னமாம்
கார்த்திகைத் தீபார்ச்சனை
திருமார் கழிக்குநெய் தைத்தேன் குடம்கிருதம்
சேர்ந்தகம் பஎம்மீன்மதித்
தீந்தயிர்ப் பரமனுக் காட்டல்விதி பூரணைத்
திதிதோறும் மாதபூசை
அரிதா அறிந்துனக் கபிடேக மதுபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணு விளிற்றுதிசெய் உண்ணு முலைக்குரிய
அண்ணு மலைத்தேவனே.

இங்குக் குறித்தவகைகளில் மருக்கொழுந்து உட்பட பிற எல்லாவற்றையும் இறைவனுக்கு அபிடேகப் பொருள்களாகக் கொண்டு அபிடேகம்செய்விக்கலாம். ஆனல் தீபத்தை - விளக்கை அபிடேகப் பொருளாகக்கொண்டு அபிடேகம் செய்விப்பது இயலுமா என்ற ஐயம் எழுகின்றது.

சிவாலயத்தில் மூலத்தானம் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் நிறையப் பல விளக்குக்களை ஏற்றிவைத்து, அவற்றின் சோதியில் இறைவனது திருவுருவத்தை மூழ்கியிருக்கச் செய்வதே தீபாபிடேகமாகும் என்று கொள்ளக்கிடக்கின்றது. இவ்வேறுபாடு தோன்றவே போலும் மேற்குறித்த பாடலில் நாவலர், 'தீபாபிடேகம்' என்று கூருமல், "தீபார்ச்சனை" எனச் சிறிது மாற்றிக் கூறியிருக்கின்ருர்.

வழிபாட்டுப் பொருள்களில் மற்றைய எல்லாவற்றையும் விட, தீபம் - விளக்கு முதன்மைபெற்றுத் திகழ்வது. தீப ஆராதனையில் பல்வேறு வகையான வடிவங்களில் தீபங்களை ஏற்றி இறைவனுக்கு உபசாரம் செய்தலை யாவரும் நன்கு அறிவர், "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்பன போன்ற அருட்டிருமொழிகள் இறைவனே சோதி வடிவினனு தலை விளக்கும்.

இத்தகைய சோதிக் காட்சி தீபார்ச்சனை நடைபெறுவது மேற்காட்டிய பாடலில் மட்டுமன்றித் தமிழகம் எங்கணும் கண் கூடாகக் காணப்படுகின்ற ஒன்று. கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் தமிழ் நாட்டில் சிவ விட்டுணு ஆலயங்கள், இல்லங்கள் எங்கும் சோதிமயமாகக் காட்சியளிக்கும்.

மற்றைய மாதங்களில் இறைவனுக்கு அபிடேகம் செய்யப் படும் பொருள்கள் உடலுக்கு நலம் தருவன. இக் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்பெறும் விளக்கு உயிருக்கு நலம் தரும் ஞானத்தைக் குறிப்பதாகும். இந்த ஞானதீபக் காட்சிக்குச் சிறந்து விளங்கும் தலம் திருவண்ணுமலை. மற்றும் சர்வாலயங் களிலும் இத்தீபக்காட்சி தவருமல் நிகழ்வதேயாகும். அத் தகைய திருக்கார்த்திகை நன்னுள் இதுபொழுதேயாகலின். அனைவரும் தீபார்ச்சனையைச் செய்வித்தும், செய்தும், கண்டும் ஒண்சுடரான உலப்பிலி நாதனுகிய இறைவன் திருவருளுக்கு உரியராவோம்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"I had the rare privilege of visiting this temple today. The Manager was kind enough to take me round to various places of worship inside the temple, explaining the significance of various deities in the temple. The temple is kept very clean Everything seems to be done in a disciplined way. I was impressed with the way he took the dead elephant out without any injury to the animal. It was a day well spent in my life."

Sirkali,

(Sd.) K. Govindaswamy
District Educational Officer
Mayuram.

4—12—70.

# ஞானசம்பந்தம் - புத்தாண்டு

சமயநெறி மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. மிகப் பழமையான இலக்கியங்களிலும், அகழ்வாராய்ச்சிகளிலும், கல்வெட்டுக்களிலும் சமயம் மக்கள் வாழ்க்கையோடு ஊடுருவி வருவதைக் காண்கிறோம்.

முடியுடை மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் சமயக் காவலர்களாக விளங்கிவந்துள்ளனர். இந்நாட்டில் உள்ள பல ஆலயங்கள் மன்னர்கள் எழுப்பியவை. குடிமக்களும் சமய நெறியின் சிறப்பறிந்து அதனைப் பின்பற்றி வாழ்ந்ததைத் தமிழக வரலாறு காட்டுகிறது. மக்கள் இத்தகைய உண்மைகளை உணர அருளாளர்களும் நாயன்மார்களும் அவதரித்து தலங்கள் தோறும் சென்று அருள் விளக்கம் கண்டனர்.

சமய உணர்வை இன்றைய நிலையில் மக்களிடையே பரவச்செய்வதற்குச் சிறந்த சாதனம் பத்திரிகையே என்பதைத் திருவுளத்தெண்ணிய தருமையாதீனம் இருபத்துநான்காவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் " ஞானசம்பந்தம் " என்னும் இத்திங்கள் இதழைத் தொடங்கிவைத்தருளினார்கள்.

தமிழகத்தில் சிறந்த சமய இலக்கியத் திங்கள் இதழாக விளங்கிவருகிறது இவ்விதழ். இருபத்தொன்பது ஆண்டுகளில் இப்பத்திரிகை ஆற்றிய பணிகள் பலவாகும். சிறந்த சமய நுண்பொருட் கட்டுரைகளைத் தாங்கிச் சமய மணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் இதழாக ஞானசம்பந்தம் வெளிவருகிறது. தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆசியோடு அவர்களின் அருளுரைகளை உலகிற்கு வழங்கும் பெரும் பணியைச் செய்து வருகிறது.

வெளிவராத நூல்கள் பல இவ்விதழ் வாயிலாக வெளியிடப் பெற்றுள்ளன. அறிஞர் பலரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவ்வாறு பல்வகையாலும் பணி செய்து இலங்கை மலேயா முதலிய கடல் கடந்த நாடுகளில் வாழும் அன்பர்களும் இருபத்தொன்பது ஆண்டுகளாக வெளிவரும் இவ்விதழைப் பெற்றுப் பயனுறுகின்றனர்.

அன்பர்கள் பலரும் காட்டும் ஆக்கமும் ஊக்கமுமே பத்திரிகை வளர்ச்சிக்கு அடிப்படை. சமயப் பற்றுடைய இலக்கிய ஆர்வமுடைய எல்லோரும் இத்திங்களிதழ் மேலும் சிறக்கத் துணை நிற்கவேண்டும்.

வாழ்க ஞானசம்பந்தம்!

வளர்க சமய நெறி!!

---

## விசேஷ நாட்கள்

### 11—12—70 முதல் 13—1—71 முடிய

| | |
|---|---|
| 11—12—70 | வேளூர்க் கிருத்திகை |
| 12—12—70 | சர்வாலயதீபம் |
| 15—12—70 | ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூசை |
| 20—12—70 | இயற்பகை நாயனர் திருநக்ஷத்திரம் |
| 24—12—70 | மானக்கஞ்சாற நாயனர் திருநக்ஷத்திரம் |
| 26—12—70 | சனிப்பிரதோஷம் |
| 28—12—70 | சோமவார அமாவாசை |
| 29—12—70 | சாக்கிய நாயனர் திருநக்ஷத்திரம் |
| 4—1—71 | வாயிலார் நாயனர் திருநக்ஷத்திரம் |
| 7—1—71 | வேளூர்க் கிருத்திகை; வைகுண்ட ஏகாதசி |
| 9—1—71 | சனிப்பிரதோஷம்; இரவு நடராஜர் அபிஷேகம் |
| 10—1—71 | ஆருத்திரா தரிசனம்; சடைய நாயனர் திருநக்ஷத்திரம் |
| 13—1—71 | போகிப்பண்டிகை |

குருபாதம்

குருவருள்

# தோத்திரமும் சாத்திரமும்

## விடையேறும் விமலன்

உலகில் செல்வச் சிறப்பிற்கு ஊர்தி அல்லது வாகனம் ஒரு சிறந்த அறிகுறியாக உள்ளது. குடிமக்களில் செல்வராய் உள்ளோர்க்குச் சிவிகை ஏற்றம் சிறப்புத் தந்தது. 'சிவிகையில் செல்லும் நிலைமை முற்பிறப்பில் அறம் செய்தவர்கட்கே கிடைக்கும்' என்பதைத் திருவள்ளுவரும்,

"அறத்தா றிதுவென வேண்டா, சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்ற திருக்குறளில் குறிக்கின்றார். பண்டைநாளில் புலவர்களைப் புரவலர்கள் சிவிகையில் ஏற்றிச் சிறப்பித்தனர். அரத்துறைப் பெருமான் திருஞானசம்பந்தருக்கு முத்துச்சிவிகை அளித்தமையும் இங்குக் கருதற்பாலது.

இனி, 'யானை, குதிரை, தேர்' என்பன அரசர்க்குரிய ஊர்திகளாகக் கொள்ளப்பட்டன. தேர்களில் பூட்டப்படும் குதிரைகளின் எண்ணிக்கை அவரவர் தகுதிக்கேற்ப வேறுபடும். அண்மைக் காலம் வரையில் குடிமக்கள் தங்கள் வண்டிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குதிரைகளைப் பூட்டலாகாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஆளுநர்கள் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியில் செல்லலாம். நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் இராசப்பிரதிநிதிகள்தாம் செல்ல வேண்டும் என்ற மரபுகள் இருந்தன. புராணங்களில் வரும் தேவர்கள், அசுரர்கள் தேர்களில் ஆயிரக்கணக்கான குதிரைகளும், சிங்கங்களும் பூட்டப்பட்டிருந்தனவாக அறிகின்றோம். இவற்றாலெல்லாம் அறிவது என்ன? செல்வத்திற்கும், அதிகாரத்திற்கும் ஊர்திகள் சிறந்த அடையாளங்களாய் விளங்கின என்பதே.

குதிரைகளைத் தேர்களில் பூட்டி அத்தேர்களின்மேல் ஏறிச் செல்வதைவிடக் குதிரைகளின்மேலே ஏறிச்செல்வது சிறப்பாகக் கருதப்பட்டது. குதிரைகளின்மேல் ஏறிச்செல்வதினும் யானையின்மேல் ஏறிச்செல்வது பெருமையைத் தந்தது.

"யானைமேல் கொண்டு சென்றார் இவுளிமேல் கொண்டு வந்தார்" (முன்பு குதிரைமேல் வந்தவர், இப்பொழுது யானைமேல் போகின்றார்) என்று புகழ்ச்சோழரை ஓரிடத்தில் சேக்கிழார் சிறப்பிக்கின்றார். இதனால், குதிரைமேல் செல்வோர் படைஞரும், அமைச்சருமே யாக, அரசராய் இருப்போர் - சிறப்பாக அரசர்க்கரசராய் இருப்போர் - யானைமீதே ஏறிச் சென்றனர்.

"மத்த யானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள்"

என்று சுந்தரரும் பாடுகின்றார்.

யானைமேல் அம்பாரியிட்டுக் குடைபிடித்துச் செல்லுதல் அரசர்க்குரிய தனிச்சிறப்பு.

"மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் — நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்"

"யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் — ஏனை
வினை உலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள"

என்கின்றது நாலடி நூல்.

"குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

என்கின்றார் அதிவீரராம பாண்டியர். எனவே, அக்காலத்தில் யானைமேற் செல்லுதல், இக்காலத்தில் தனி உந்தூர்தியிற் செல்வதுபோலக் கருதப்பட்டமை தெளிவாகின்றது.

மக்களைப்போலவே தேவர்களும் வாகனச் சிறப்பை விரும்புகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். ஆட்டுக் கிடாய், எருமைக்கடா, மான் முதலிய வாகனங்கள் எளிய தேவர்கட்கு உரியனவாக, செல்வத்திற் சிறந்த குபேரனுக்குப் புட்பக விமானமும், அதிகாரத்திற் சிறந்த இந்திரனுக்கு நான்கு தந்தங்களை உடைய 'ஐராவதம்' என்னும் வெள்ளை யானையும் வாகனமாய் உள்ளன. இன்னும் உலகத்தைப் படைத்தும், காத்தும் நிற்பவராய், இவர்களின் மேம்பட்ட பிரம விட்டுணுக்களுக்குப் பறக்கும் பறவைகள் வாகனம் ஆகின்றன. பிரமனுக்குப் பறவைகளுட் சிறந்த அன்னமும், திருமாலுக்குப் புள்ளரசாகிய கருடனும் வாகனங்கள் என்பது நன்கறியப் பட்டது.

'இந்நிலையில் சிவபெருமானுக்கு வாகனமாவது எது' என்று நோக்கினுல், நகைப்புத்தான் தோன்றுகின்றது. அஃதாவது ஒற்றைக் காளையே அப்பெருமானுக்கு வாகனம். பல வகைப்பட்ட வாகனங்களில் காளை ஒரு வாகனமாகவே கருதப்படுவது இல்லை. அது, வண்டிகளில் வேண்டுமானுல் பூட்டப்படுமன்றி நேரே வாகனமாக அமைவதில்லை. காளை பூட்டிய வண்டிகளைப் பார வண்டிகளாகவே பண்டைய நூல்கள் கூறுகின்றன. ஒற்றைமாட்டு வண்டி முற்காலத்தில் எங்கும் சொல்லப்படவே இல்லை. 'பொதிமாட்டுக்காரர்' எனப்படுகின்ற சில வணிகக் கூட்டத்தினர் பொதிகளைக் காளைகளின்மேல் ஏற்றிச்செல்வது உண்டு. மாடு மேய்க்கும் சிருர்கள் சில வேளைகளில் விளையாட்டிற்காக மாட்டின்மேல் ஏறிச்செல்வர். எனவே, எவரேனும், எக்காரணம் பற்றியாவது காளைமேல் ஏறிச் செல்வார்களாயின் அவர்களது செயல் நகைப்புக்கு உரியதாவதன்றிப் பெருமையாவது இல்லை. ஆயினும், சிவபெருமான் காளையையே வாகனமாகக் கொண்டது, 'பித்தன்' என்னும் காரணத்தாற் போலும்!

இப்பெருமானிடத்திலும் ஒருத்தி காதல் கொண்டாள். அவள் தன் காதலன் இப்படிக் காளைமாட்டையே வாகனமாகக் கொள்கின்ருனே என்று வருந்தித் தன் தோழியிடம் நொந்து கொள்கின்ருள் என்பதை மணிவாசகர் பாடும் பகுதி இது:

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேருதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ.

காதலன் எளிய நிலைமையை உடையவனுயின் அதனல் காதலிக்கு வருத்தம் மிகுவது இயல்பேயன்ருே! இன்னும் அவள் பின்வருமாறு சொல்லி வருந்துகின்ருளாம்.

காணுர் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
யானுல் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ

காளையை வாகனமாகக்கொண்ட சிவபெருமான், பிரமசாரியல்லன்; மலைமகள் மணுளன். எங்குச் செல்லினும் அப் பெருமாட்டியை அவன் உடன்கொண்டே செல்வது வழக்கம். ஆகவே, காளையாயினும் தனக்கு ஒன்றும், தன் தேவிக்கு ஒன்றுமாக இரண்டு காளையையேனும் கொண்டிருக்கலாம். அவ்வாறும் இன்றி ஒரு காளையின்மேலே தன்னேடு தன் தேவியையும் ஏற்றிக்கொண்டு இடர்ப்படுதல் என்னையோ என்று சில இடங்களில் அவன் அடியார்கள் வருந்துகின்ருர்கள்.

“ தமக்கென்று மின்பணி செய்திருப் பேமுக்குத்
தாமொருநாள்
எமக்கென்று சொன்னல் இரங்குங்கொலாம்; இணை
யாதும்இன்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேருெப்ப தொன்று
தொண்டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெருதுட னேகொண்ட
உத்தமரே ”

என்பது அவ்வருத்தத்தால் காரைக்கால் அம்மையாரது திருவாயினின்றும் எழுந்த திருப்பாட்டு. இன்னும் அவர், “ ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான் ” என்று கூறி இரங்குகின்ருர்.

சிவபெருமான் இவ்வாறு பலரும் பல சொல்லுமாறு ஒற்றை விடையை ஊர்தியாகக்கொண்ட காரணம் யாது? இவ்வினுவிற்கு மாணிக்கவாசகர் தரும் விடை பின்வருவது,

தடமதில்கள் அவைமூன்றும் தழல்செய்த நாளின்கண்
இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ.

சிவபெருமான் திரிபுரம் எரிக்கச் சென்ற காலத்தில் பூமி முதலியவற்றால் அமைந்த தேர் அச்சு முரிந்துபோக, அப்பொழுது விட்டுணுமூர்த்தி இடப உருவம் கொண்டு வந்தமையால் அதனைச் சிவபெருமான் ஊர்தியாகக்கொண்டு திரிபுரத்தை வென்றார் என்பது இதில் குறிக்கப்பட்ட வரலாறு.

இனி, 'திரிபுர சங்கார காலத்தில் திருமால் சிவபெருமானுக்கு இடப ஊர்தியாய் உருக்கொண்டு தாங்கியதற்கும் காரணம், சிவபெருமான் முன்பே இடப வாகனனாய் இருந்ததே' எனக் கந்தபுராணம் கூறுகின்றது. ஆகவே, சிவபெருமான் முதலில் இடபத்தை வாகனமாகக் கொண்ட வரலாறு, 'ஒரு பிரளய காலத்தில் அறக்கடவுள் (தரும தேவதை) தனது அழிவிற்கு அஞ்சி இடப உருவம் கொண்டு சிவபெருமானிடம் சரணடைய, அதனை அப்பெருமான் தனக்கு வாகனமாக ஏற்றுக்கொண்டான் என்பதே' என அப்புராணம் அவ்வரலாற்றை விரித்துரைக்கின்றது

இவ்விருவகை வரலாறும் பற்றிச் சிவபெருமானது விடை ஊர்தி இரண்டு வகையாகச் சொல்லப்படுகின்றது. போர்க் காலத்தில் திருமால் உருமாறி வந்த இடபம், 'மால் விடை' என்றும், 'போர் விடை' என்றும் சொல்லப்படும். அறக் கடவுள் உருமாறி வந்த இடபம், 'அற விடை' என்றும், 'அருள் விடை' என்றும் சொல்லப்படும். இரு விடைகளும் இரண்டு உண்மைகளைத் தெரிவிக்கும்.

திருமாலுக்கு, "புருடோத்தமன்" என்ற பெயர் உண்டு. தத்துவக் கொள்கையில் உயிர், 'புருடன்' என்னும் பெயரால் குறிக்கப்படும். எனவே, 'புருடோத்தமன்' என்பது, 'உயிர்களுள் சிறந்தவன்' எனப் பொருள் தருவதாகும். 'நாராயணன்' என்னும் பெயர்க்கும், உயிர்த்தொகுதியை ஒத்து நிற்பவன் என்பதே பொருள் என்பது சிவஞான பாடியத்துள் இனிது விளக்கப்பட்டுளது. ஆகவே, சிவபெருமான் மால் விடை ஊர்தல், 'உயிர்களைத் தன்வழி நடத்தும் தலைவன்' என்னும் உண்மையையே உணர்த்துவதாகும். காளையின் சாதிப் பெயர் 'பசு' என்பது. இப்பெயரும் உயிர்களை

உலார்த்தும் ஆதலால், 'பெற்றம் ஊரும் பெரியோன்' என்பதும் மேற்கூறிய உண்மையையே தெரிவிப்பதாம்.

இனி, சிவபெருமான் அறவிடை ஊர்தல், அறத்திற்குத் தலைவனாய், உலக நலத்தின் பொருட்டு அதனை நன்கு நடத்தும் முதல்வனாதலைக் குறிக்கும். இன்னும் விடையை 'அறம்' என்னாது, 'அறக் கடவுள்' என்பதனால், 'அதுவும் ஓர் உயிரே' என்பது அறியப்படும். 'மாயோன், அறக்கடவுள்' என்னும் இருவருள், மாயோன் பெத்தான்மாக்களைக் குறிக்கும் முறையிலும், அறக்கடவுள் மூத்தான்மாக்களைக் குறிக்கும் முறையிலும் அமைந்து நிற்றல் அறியலாம். இதனால், 'சிவபெருமான் பெத்தரும், முத்தரும் ஆகிய இருவகை ஆன்மாக்களுக்கும் அவரவர் நிலையில் நின்று அவரவர்களை ஏற்ற பெற்றியால் நடத்துபவன்' என்பது உணரப்படுகின்றது. பெத்தர் - பாசத்தில் கட்டுப்பட்டவர். முத்தர் – அதனின்றும் விடுபட்டவர்.

சிவபெருமானது இடப ஊர்தி இருவகையாய் அமைந்திருத்தல் உற்று நோக்கினால் விளங்கும். சிவபெருமானைத் திரும்பி நோக்காது தன் கண் சென்றவாறு நேரே நோக்கி நிற்பது ஒருவகை. இதனையே 'போர்விடை' என்றும், 'பாயும் மால் விடை' என்றும் கூறுவர். இது சிவனை உள் நோக்கி உணராத பெத்தான்மாக்களைக் குறிக்கும்.

கண் சென்றவாறு நோக்காது திரும்பிச் சிவபெருமானை நோக்கி நிற்பது மற்றொரு வகை. இதனையே 'அறவிடை' என்பர். இது புறத்தே உலகத்தை நோக்காது அகத்தே இறைவனை நோக்கும் முத்தான்மாக்களைக் குறிக்கும். திருக்கோயில்களில் சிவபெருமான் திருமுன்பு அப்பெருமானையே நோக்கி நிற்கின்ற இடபம் இந்த அறவிடையே. 'முத்தி பெற்றோர் சிவமேயாவர்' என்னும் கருத்தினால், சிவபெருமானுக்கு உரிய 'நந்தி' என்னும் பெயர் இந்த அறவிடைக்கும் வழங்குகின்றது. சிவபெருமான் விடை ஏறும் விமலனாய் நிற்பது இத்துணை உண்மைகளை விளக்கி நிற்பதால், அதனை அருளாளர் பலவிடத்தும் எடுத்தோதிப் போற்று

கின்றனர். திருஞானசம்பந்தர் சிவபெருமானது திருச்செவியைச் சிறப்பித்து அருளிச்செய்த முதல் தொடராகிய "தோடுடைய செவியன்" என்றதை, அடுத்து, "விடை ஏறி" என இதனையே அருளிச்செய்தார். ஆகவே, உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அவனது திருக்கோலங்களில் இத்திருக்கோலமே இரண்டாவதாக அவரது உள்ளத்தைக் கவர்ந்தமை தெளிவு. திருநாவுக்கரசரும் தமது முதல் திருப்பதிகத்தில் சிவபெருமானை விளித்த முதல் தொடர் "ஏற்றாய்" இடப வாகனத்தை உடையாய்-என்பதே.


"உற்றவர்க்கு உதவும் பெருமானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனை
... ... ... ... ... ...
காணக் கண் அடியேன் பெற்ற வாறே"

என்று பாடுவார் சுந்தரர். இறைவன் இவ்வுலகை உய்விக்க உமையாளோடு உருவுகொண்டு எழுந்தருளி வந்தமையைக் குறிக்குமிடத்தில்,

"ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும்வந் தருளி"

என ஏறுடை ஈசனையே மணிவாசகர் குறிக்கின்றார். இன்னும் "பாயும் விடை அரன் தில்லை" என்பது அவர் தில்லைத் திருக்கூத்தனைச் சிறப்பித்த தொடர்.

இடபம் சிவபெருமானுக்கு ஊர்தியாதலோடு, கொடியாய் விளங்குதலையும் அருள்நூல்கள் ஆங்காங்கு எடுத்தியம்பும். இத்தகைய தோத்திரங்கட்கெல்லாம் சாத்திரங்கள் திறவுகோலாய் அமைந்திருத்தலை மக்கள் உணர்ந்து பயன் கொள்வார்களாக.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

(மலர் 29, இதழ் 12, பக்கம் 662 இன் தொடர்ச்சி)

## 36. இரசவாதஞ் செய்தது

வரதனும் பெருமான் மீனவன் படையிடை வந்து தண்ணீர்ப்பந்தர் வைத்தது உரைத்தோம். இனி பரதசாத்திரம் வல்ல பாவையாள் ஒருத்திக்காக இரசவாதம் செய்தருளிய செயலினைச் சிந்திப்போம்.

தென்னவன் இராசேந்திரன் ஆளும் பாண்டிய நாட்டில் வைகை மருங்கிலுள்ள அநேக தலங்களில் திருப்பூவணமும் ஒன்று. கதிர் முதல் பல கடவுளர் இங்கே இறைவனை வழிபட்டு நற்பேறு பெற்றுள்ளனர். அப்பதியில் மிக்க தவம் செய்த தளிப்பெண்கள் குடியில் அந்தரத்தவரும் ஆசை கொள்ளும் அளவில் கடலமுதனைய பெண்ணொருத்தி பொன்னனையாள் என்ற பெயரில் இருந்தாள். நரம்பின் ஏழிசை செய் யாழிசைப்பாடலும், நடன நூல் வல்லமையும் பெற்றவள். அழகில் அரம்பையரையொத்தாலும் அறநெறி யொழுகும் வரம்பினுல் அவர் தமக்கும் மேலாயினவள். நாட்காலையெழுந்து நீராடி சுடர்மதிக்கண்ணியனின் அருச்சனை நியமம் முடித்து, பூவணத்துப் பெருங்கோயில்புக்கு நிருத்தமாடி, அடியவர்களை சித்த மகிழ்வோடு உணவூட்டி உபசரித்துப் பின் எஞ்சியதைத் தானும் உட்கொள்வாள்.

**பொன்னனையாளின் ஆசை :-**

இவளுடைய சிவபக்தியை உலகத்தார் உணர இறைவன் இவளுள்ளத்தில் தன்னுடைய திருவுருவைப் பொன்னினுல் செய்து பார்க்கும் அவாவை எழுப்பினுன்.

மேலும் மேலும் எழும் ஆசையினல் இறைவன் திருவுருவை மெழுகில் கருக்கட்டினள். நாள்தோறும் வரும் பொருளெல்லாம் அன்பர் பூசையிலேயே செலவாகிவிடுவதையறிந்து – அப்பொருளில் சிறிது ஒதுக்கிப் பொன்வாங்க வழியில்லையேயென வருந்தினள். பாண்டியனது வறுமைதீர பொற்கிழி அருளிய பெருமானை (குலபூடணனுக்கு உலவாக்கிழி யருளியதை – இந்தத் தொடரின் 31 ஆம் பகுதியாக நீங்கள் கண்டிருப்பீர்கள்) உள்மனதோடு நினைந்துவழிபட அதனையும் பெருமான் அறிந்தான்.

**அருளவரும் கோலம் :-**

எண்தோளீசன் துய்யநீறணி மேனியராக, கட்டங்கந் தொட்ட கையினராக, விபூதி நிறைந்த பையுங்கொண்டு, கோவணவுடைவுடுத்தி, பவளச்செய்யவேணிமறைத்து சித்தர் கோலங் கொண்டு பூவணம் வருகிறார். வந்த விந்தைச் சித்தர் பொன்னனையாளின் மாளிகையுட் புகுந்து திருவமுதுகொள்வா ரொடுங் கூடாமல் தனித்து ஒருபுறம் அமர்ந்திருக்கிறார். அமுது கொண்டபின் அடியவர் அனைவரும் அகல சேடியர் இவரைத் தனித்துக் காணவே இவர் பக்கல் வந்து பணிந்து திருவமுது ஏற்க வேண்டினர்.

சித்தரோ 'உங்கள் அமுதனைய தலைவியை இங்கே அழையுங்கள்' என்றார்.

**முத்தாடும் முகிழ்நகையாள் வந்தாள் :-**

முத்தாரமுகிழ்வாணகைத் தலைவியைக் குறுகி சேடியர் இச் செய்தி சொல்லவும் அவளும் நவமணிக்கலன்பூத்தகொம்பென நடந்துவந்து அந்த உவமையிலாப் பெரியோனுக்கு முகமன் கூறி ஆசனமளித்து திருவடி விளக்கம் செய்து நும்பணி முடிக்கக் காத்திருக்கிறேன்; அகத்துள்ளே வந்தருள்க என்று விண்ணப்பஞ் செய்துகொண்டாள். சித்தரோ அதற்கேதும் உத்தரஞ் சொல்லாமல் 'வடுவைப் பழிக்கும் விழியாளே! நீ உன் இடையையொத்து இளைத்திருப்பது எதனல்? அதை என்னிடம் கூறு' என்று கேட்டார்.

எங்கள் நாயகனும் முக்கண்பெருமானின் திருவுருவைப் பொன்னில் வார்க்க ஆசைப்பட்டேன்; ஆனல் நாடோறும்

வரும் பொருள் ஏதும் எஞ்சாமல் எல்லாம் அடியவர் பூசையி லேயே செலவாகின்றன. செய்வதறியாது கவல்கின்றேன் என்ருள் பெண்ணரசி.

சித்தர் :- பெண்களின் நாயகமே! நீ சிறந்த அறிவோடு விளங்குகிருய். செல்வம், யாக்கை இளமை இவை நீரில் தோன்றும் குமிழிகள்போல மிக விரைந்து அழியும் என்பதை யும் தருமம் ஒன்றே நிலைக்கும் என்புதையும் அறிந்துள்ளாய். தருமத்துள் சிவதருமமே சிறந்தது. அதனுள்ளும் சிவபூசை உயர்ந்தது. சிவபூசையுள்ளும் மகேசுவரபூசைதான் மிகச் சிறந்தது - என்று நீ தெளிவாக உணர்ந்துள்ளாய்.

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்துள்
அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்
அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்.

ஆகவே, உன்பெயருக்கேற்ப நீ வணங்கும் பெருமானைப் பொன்னிஞல் காண உன்மனையிலுள்ள பித்தளை, ஈயம் முத லான கலங்களைக் கொணர்க. அவற்றை நாம் உன் மன முவக்கப் பொன்ஞக்குகிருேம் என்ருர் சித்தர்.

## பொன்னுன புதுமை :-

பொன்னனையாள் சித்தரின் உத்திரவுப்படியே பாத்திரங் களைக் கொணர்ந்தாள் சித்தர் அப்பாத்திரங்கள்மீது விபூதி யைச் சிதறி, இவற்றை இன்றிரவு நெருப்பிலிட்டு நாளைக் காலை எடுத்தால் பொன்ஞக மாறியிருக்கக் காண்பாய் – என்று கூறி அவ்விடம்விட்டகன்ருர். மங்கைநல்லாள் அவர்பின்னே ஓடோடிச்சென்று இன்றையதினம் அடியவளின் இல்லத்தில் தங்கி – இவற்றையும் நெருப்பில் முறைப்படி இட்டு பொன் ஞக்கிய பிறகு நாளைப்பகல் செல்லலாம் என்று உருகிவேண் டியும் அங்கயற்கண்ணியை அரைநொடிப்பொழுதும் அகலாத பெருமான் அதற்கு இணங்காமல் விரைந்து மறைந்தார்.

இப்படிச் சித்தர் வேடம் பூண்டு தன்பால்வந்து அருள் செய்த பெருமான் மதுராபுரிமேவிய அழகனே என்பதுணர்ந் தாள். பின் அவர் சொன்னபடியே அப்பாத்திரங்களைத் தழலி

வீட்டுப் பொன்னைக் கண்டாள். அரன் தாளடைந்தாரைவிட்டு இருள்மலவலி ஓடுமாறுபோல அவ்வுலோகங்களை விட்டுக் களிம்பு அகன்றது. அத்தூயபொன்கொண்டு தன் கருத்திற் கிசைந்த நாயகனின் உருவை வார்த்தாள். மழவிடையுடையானின் மேனிவனப்பினைக்கண்டு 'அழகியபிரானே இவன்'— என்று அள்ளி முத்தமிட்டாள்.

திருப்பூவணக் கோயிலில் 'அவ்வுருவைப் பதித்து விழாப் பல செய்து மகிழ்ந்து பொன்னனையாள் வீடுபெற்றாள்

நையும் நுண்ணிடையாள் அந்நாயகன் மேலிட்ட கைக்குறியும், அவள் அழைத்த பெயர்க்குறியும் (அழகிய பிரான்) கொண்டு இந்தயுகத்திற்கேற்ப பொன்னுருமாறி தக்கவகையில் அத்தலத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறான்.

(வளரும்)

---

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

(மலர் 29, இதழ் 12, பக்கம் 684 இன் தொடர்ச்சி)

### திருவையாறப்பர் துதி

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

இரவி தன்குலச் சுரதவேந் தனுக்கெழி
    லிரசித கிரிக்கோட்டின்
தரிச னத்தொடு பெறற்கரு மைந்தனுந்
    தந்துபி னுயர்மோக்கம்
பரிவி னிற்றரு திருவையாற் றிறைவயான்
    பதிற்றுப்பத் தந்தாதித்
தெரிய னின்கழன் மிசைபுனைந் தேத்திடத்
    திருவருள் புரியாயே.

(இ-ள்) இரவிதன்குலம் சுரதவேந்தனுக்கு - சூரிய வமிசத்துதித்த சுரதமகாராசனுக்கு, எழில் இரசித(ம்) கிரி கோட்டுஇன் தரிசனத்து ஒடு - அழகிய எழுச்சியினையுடைய வெள்ளிமலையாகிய கைலாயத்துச்சியுள் எழுந்தருளிய காட்சியினையும், பெறற்கு அரும் மைந்தனும் தந்து - பெறவரும் பிள்ளைப் பேற்றினையும் தந்தருளி, பின் உயர்மோக்கம் பரிவினில்தரு(ம்) - பின்னர் (உலகியல் வெறுத்து உறுகதிதேவரீரே, என்று வேண்டியவளவில்) மேலாகிய முத்திப்பேற்றினையும் விருப்பத்தினல் (அன்புடன்) அருளிய, திருஐயாற்று இறைவ- திருவையாறெனும் பெரும்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய பேர் இறைவனே !, யான் - அடியனேன், நின் கழல்மிசை - தேவரீருடைய திருவடியின்கண், பதிற்றுப்பத் தந்தாதி யெனுஞ் சொன்மாலையாகிய நன்மாலையினை சாத்திப் புகழ்ந்து துதித்திட, திரு அருள் புரியாய் - திருவருளாகிய கருணை செய்தருளுவீராக. எ – று. ஏகாரம் - ஈற்றசை.

(கு-ரை) திருக்கயிலைக் காட்சியும், அக்காட்சியால் மகப்பேறும், அந்நிலையில் உலகியலை உவர்த்து உயர்கதிநாடிய

பெற்றிமையால் அச்சுரதமகாராசனுக்கு என்றும் அழிவில்லா, நின்று நிலைத்த நிரதிசயவின்பமும் அளித்தனை. அங்ஙனம் வரதனுயிருப்பதால் எனக்கருள் புரிவதும் கடனும் என்பதுங் குறித்துள்ளனர்போலும். ஆகவே திருவையாற்றிறைவன் எல்லாப் பொருளும் அருளும் இறைவன் என்பது பெறப்படா நிற்கும். பொல்லா வினைகளறுத்து புகழ்ச்சேவடி தந்து, செல்வாய செல்வம் தரும் இறைவன் என திருநாவுக்கரசர் போற்றியிருப்பதும் கருதத்தக்கது எழில் - எழுச்சி. (சமுதாய சோபை என்பர்). இரசிதம் - வெள்ளி மோக்கம் - மோட்சம் என்பதன் திரிபு (தற்பவம்). கோடு - உச்சி (சிகரம்). இறைவன் - எல்லாவுலகமுமானவன். எல்லா உயிர்களிடத்துஞ் சென்றுதங்குபவன், இறைமைக் குணங்களுடையவன். கழல்— காலிற்றரிக்கும் ஒருவகை அணி. வீரக்கழல் எனினுமாம். நீ, எழுவாய். புரிவாய், பயனிலை. திருவருள், செயப்படுபொருள்

## அறம்வளர்த்தநாயகி துதி

கலிநிலைத்துறை

புலவர் போற்றுமை யாற்றெம திறைவனைப் புகழ
உலகம் யாவையு மீன்றுபல் லுயிர்களு முய்ய
அலகி லாவரு ளொடுமெண்ணுன் கறம்வளர்த் தவள்செஞ்
சலச வாண்மலர்ப் பூஞ்சரன் முறைமுறை தாழ்வாம்.

(இ-ள்) புலவர் போற்றும் ஐயாற்று எமது இறைவனை- தேவர்களும் வந்து வழிபாடு செய்து துதிக்கின்ற திருவையாற்றுப் பெரும்பதியில் எழுந்தருளியிருக்கின்ற எம்முடைய ஆண்டவனை. புகழ - இப்பிரபந்தத்தினை யாத்து புகழும் பொருட்டு, உலகம் யாவையும் ஈன்று - அண்டபிண்ட சராசரங்களாகிய அனைத்துப் பொருள்களையும் தோற்றுவித்து (பெற்றருளி), பல் உயிர்களும் உய்ய - எல்லா உயிர்களும் ஈடேற (கடைத்தேற). அலகுஇலா அருள் ஒடும்-எண்ணற்ற (கணக்கற்ற) அருள் திருவடிவோடும் எழுந்தருளியுள்ள. எண் நான்கு அறம் - முப்பத்திரண்டு தருமங்களையும், வளர்த்தவள் - ஓங்கி வளர்த்த பெற்றிமையால், அறம்வளர்த்த நாயகியார் என்னும் திருப்பெயர் பூண்டுள்ள அம்மையாருடைய, செம் சலசம் வாள்மலர் பூசரண் - ஒளி பொருந்திய செந்தாமரை போலும் அழகிய திருவடிகளை; முறைமுறை - வரிசை வரிசையாக (நூலிற்கூறும் கிரமப்படி) தாழ்வாம் - வணங்குவாம்.

(கு - ரை) முப்பத்திரண்டு அறங்களாவன :- 1. ஆதுலர்க்குச்சாலை, 2. ஓதுவார்க்குணவு, 3. அறுசமயத்தோர்க்கடிசில், 4. பசுவிற்கு வாயுறை, 5. சிறைச்சோறு, 6. ஐயம், 7. தின்பண்டம் நல்கல், 8. அறவைச்சோறு, 9. மகப்பெறுவித்தல், 10. மகவு வளர்த்தல், 11. மகப்பால் வார்த்தல், 12. அறவைப் பிணஞ்சுடல், 13. அறவைத் தூரியம், 14. சுண்ணம், 15. நோய்மருந்து, 16. வண்ணார், 17. நாவிதர், 18. கண்ணாடி, 19. காதோலை, 20. கண்மருந்து, 21. தலைக்கெண்ணெய், 22, பெண்போகம், 23. பிறர்துயர் காத்தல், 24. தண்ணீர்ப்பந்தர், 25. மடம், 26, தடம், 27. கா, 28. ஆவுரிஞ்சுதறி, 29. விலங்கிற்குணவு, 30. ஏறு விடுத்தல், 31. விலைகொடுத்துயிர்காத்தல், 32. கன்னிகாதானம் ஆயவைகளாம்.

அறம்வளர்த்தநாயகி ;- பார்வதி பிராட்டியார் சிவபிரானை நோக்கி நான் அறம் வளர்க்க வேண்டுமென, 'சிவபிரான் இருநாழி நெல்லளித்து இதைப் பூவுலகிற் கொண்டுசென்று உழவுத் தொழிலால் பெருக்குக' என அவ்வாறே கங்கைநாட்டு உழவர்பால் நெல்லளித்து விருத்திசெயச்செய்து காஞ்சியடைந்து தவஞ்செய்து நெற்கொண்டு உழவாவதைப்பெருக்கி அறம்வளர்த்தாள்.

புலவர் - தேவர், அறிஞர். யாவையும் - உம்மை, முற்றும்மை. பல்உயிர் - சரம், அசரம் ஆகிய பொருள்கள். சலசம் - தாமரை; காரண இடுகுறி. வாள் - ஒளி. (வாளொளியாகும்.) என்பது தொல்காப்பியம். தாழ்வாம் - மனமொழி ஒடுங்கி எட்டுறுப்புறத் தாழ்ந்து வணங்குதலாம். யாம், எழுவாய். தாழ்வாம், பயனிலை. பூஞ்சரண் - செயப்படுபொருள்.

## விநாயகர் துதி

(எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

ஆரண முணர்ந்த சிலாதநன் முனிவர்க்
கருஞ்செப சித்தியுந் திகிரி
நாரணன் முதலோர் புகழ்சுதன் றனையு
நல்கிய பரமனைத் துதிக்கப்
பூரண மதுர வாக்கெனக் குதவு
புண்ணியம் அமைதகு புழைக்கை
வாரண வதனப் புங்கவன் கமல
மலர்ப்பதஞ் சிரமிசை யணிவாம்.

(இ - ள்) ஆரணம் உணர்ந்த சிலாதநல் முனிவர்க்கு - சுருதியெனும் திருப்பெயருடைய நான்கு மறைப்பொருளையும் நன்கு ஓதி உணர்ந்த பெருமையுறு கல்லுண்டவலிய முனிவர் பெருமாற்கு, அரும் செப சித்தியும் - அருமையாகிய பஞ்சாக்கர மனுவின் செபசித்தியும், (செபத்திற்குரிய பிராப்தி). திகிரி நாரணன் முதலோர் புகழ் சுதன்தனையும் - சுதரிசமெனும் சக்கிராயுதந் தாங்கிய திருமால் முதலிய தேவர்களனைவரும் வணங்கிப் புகழ்கின்ற கண நாதராகிய திருநந்தியெம்பெருமான் எனும் பிள்ளையையும், நல்கிய பிரமனே - திருவுளம் மகிழ்ந்து கொடுத்தருளிய பரம கருணாமூர்த்தியாகிய திருவையாற்றுப் பெருமானை, துதிக்க - பதிற்றுப் பத்தந்தாதியெனுங்காப்பியத் தால் பாடித் தோத்தரிக்க, பூரண(ம்) மதுரவாக்கு - நிறைந்த இனிமையாகிய வாக்கினை - மொழிகளை. எனக்கு உதவு புண்ணியன் - அடியேற்கு அருளிய புண்ணிய வடிவினனும், உமைதரு புழைகை வாரண(ம்) வதன(ம்) புங்கவன் - உமா தேவியார் மகிழ்ந்தளித்தருளிய(மைந்தனும்) துளையினையுடைய துதிக்கையோடுகூடிய யானைமுகக் கடவுளும் ஆகிய விநாயகப் பெருமான்றன், கமல(ம்) மலர்பதம் - தாமரைபோலும் சிவந்த திருவடிகளை. சிரம்மிசை அணிவாம்-தலையின்மேல் அணியாகச் சூடி மகிழ்வாம். (எ - று).

(கு - ரை) சிலாத முனிவரர் தமக்குப் பஞ்சாக்கர செப சித்தியருளினமையாற்றிருவையாற்றிற்கு செப்பேச்சுரம் எனப் பெயர் போந்தது. காசியில் முத்திமண்டபமுளதுபோல இத் தலத்திலும் தென்முகப்பரமாசாரிய சுவாமிகட்குத் திருமுன் சப்பேச மண்டபம் உள்ளது. இங்கு அமர்ந்து செபிப்பின் அநந்த பலமுண்டென்பது வழக்கு. "நின்நாமத் திரு வெழுத்து, அஞ்சுந் தோன்ற அருளும் ஐயாறரே" என்பது அப்பர்பெருமான் திருவாக்காம். திருமால் முதலிய தேவர்கள் போற்றுவது சிவகண நாதராயினமையானும், இறைவன் தன் பெயராகிய நந்தியெனும் நாமத்தினைச் சூட்டி யாசாரியமூர்த்தி யாக்கினமையானும், சிவசொருப முற்றிருப்பதனுலும் பிறவாற் ருனுமாம். மதுரவாக்குதவு புண்ணியன் என்ற குறிப்பால் இப்புலவர் வித்தாரகவியோடமையாது மதுரகவியிலும் வல்லு நர் என்பதும் விநாயகர் வழிபாடு பெரிதும் உடையராவர் என்பதும் கொள்ளக்கிடக்கும். புசுழ்சுதன் - சைலாதி; சிலாத முனிவர் புதல்வர் திருநந்திதேவர். இச்செய்யுளான் சிலாத முனிவர் நந்தியெம்பெருமான், விநாயகப்பெருமான் ஆகியோர் தம்வரலாறும் அவதாரமும் அறியக்கிடக்கின்றன. (தொடரும்)

# அண்ணாமலை என்னும் அற்புதம்

**புலவர். திரு. இரா. செல்வக்கணபதி**

1 விண்ணோடும் கருமுகிலின் வண்ணத்தைக் காணுதற்கு
அண்ணா மலையெழுந்து விண்ணிடித்து நிற்கிறது!

2 தம்மை வியந்து தருக்குகின்ற மானிடத்தின்
வெம்மை தணிப்பதற்கு விண்ணெழுந்து நிற்கிறது!

3 செம்மை நிறக்கடவுள் சிவனென்று காட்டுதற்குக்
கொம்மைக் குவடெழுந்து குவலயத்தில் நிற்கிறது!

4 மதிப்பார் உளத்திறைவன் மாமலையாய் நிற்பனென
விதிர்ப்பில் வளஞ்சுரந்து வேறுபட்டு நிற்கிறது'

5 கார்த்திகைத் திருநாளில் கருமலையின் உச்சியிலே
நேர்த்திமிகு தீபஒளி நெறிப்பாடாய் ஏற்றுகிறார்;

6 கார்நீல மலைமீது கலந்துநிற்கும் பேரொளியால்
வேர்கொண்டு நெஞ்சத்தில் விளங்குவது எத்தனையோ!

7 குன்றிட்ட விளக்காகக் குவலயத்தில் விளங்குவது
என்றைக்கும் சைவமென எடுத்துரைக்கும் தீச்சுடரோ!

8 தீய நினைவுகளும் தெளிவற்ற கொள்கைகளும்
மாய வேண்டுமென மண்டுகின்ற பேரொளியோ!

9 கருத்து உளஞ்சிறுத்துக் காய்கின்ற மானுடத்தின்
பெருத்த அழுக்கறுக்கப் பிறங்குகின்ற தீப்பிழம்போ!

10 ஆண்டாண்டாய்ச்சேர்த்துவரும்ஆணவத்தின்உச்சியிலே
மாண்டிடுக எனச்சொல்லி மாட்டுகின்ற தீக்கடையோ!

11 முக்கண்ணன் எம்பெருமான் அக்கினியாம் திருக்கண்ணை
இக்கணந்தான் திறந்தானோ என்னும் ஒளிப்பிழம்போ'

12 பிறவிப் பெருங்கடலுள் பிறங்குகின்ற மானுடர்க்குக்
கறங்காது ஒளிகாட்டும் கலங்கரையின் பெருவிளக்கோ!

13 உள்ளத்தின் ஓர்புறத்தே ஒளிதோன்றி விட்டதென்றால்
கள்ளங்கள் கரையுமெனக் காட்டவந்த செம்பிழம்போ!

14 செம்மேனி எம்மான் அம்மைஒரு கூறாக
இம்மை அருள்வழங்க எழுந்துவந்த அற்புதமோ?

15 அன்பு விளக்கேற்றி ஆணவத்தைப் பொரியாக்கி
இன்ப ஒளிசேர்க்க எண்ணுகின்ற திருநாளோ!

16 ஆதிரையான் கார்த்திகையில் அறிவுஒளி ஏற்றுதற்கு
மாதுஒரு பாகனென மண்ணிழிந்த வண்ணமிதோ!

17 அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சி
எண்ணஞ் சிறந்து எழுந்திடுக மக்களினம்!

---


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**ஆண்டுக் கையொப்பம்**

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ 4—00

செயலாளர்,
'ஞானசம்பந்தம்'' காரியாலயம்.
தருமபுரம். மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

**திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B, A.,**

(மலர் 29. இதழ் 12, பக்கம் 680 இன் தொடர்ச்சி)

137 அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடப்பெற நின்றான் திருவடி தானே.

குறிப்புரை :- அணு அண்டம் - சீவனின் எல்லையான அண்டகோசம். பேரண்டம் - இறைவனின் எல்லையற்ற பரப்பு. இடங்கொண்ட தில்லை - இறைவனின் எல்லைக்குள்ளேதான் சீவன் இருப்பதே தவிர வேறு இடத்தில் இல்லை. சிவன் வியாபகம்; சீவன் அதனுள் வியாப்பியம் என்க. கடம் - உடம்பு. கரை - முத்திக்கரை.

பக்குவப்பட்ட உயிருக்குச் சிவனது திருவடியைத் தவிர அடங்குதற்கு வேறிடமில்லை என்பதாம்.

138 திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சித்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

குறிப்புரை :— அடி - தாங்குதல். எது எல்லாவற்றையும் தாங்குகிறதோ அது சிவம் என்க. செல்கதி - அடையும் நெறி. செப்பில் - சொல்லில். தஞ்சம் - புகலிடம். தஞ்சம் என்றடைந்தார்க்கு அதுவே புகலிடமாம் என்க. உள் தெளிவார் - அகநோக்குடையார்.

திருவடியே சிவலோகத்துக்குச் செல்லும் நெறியாகவும், அங்குள்ள சிவமாகவும் உள்ளது என்பதாம்.

139 தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

குறிப்புரை :- திருமேனி காண்டலாவது, சிவனைப் சோதிப் பிழம்பாகச் சிரசின்மேல் காணுதல். திருநாமம் செப்பலாவது, மந்திரத்தினாலோ தோத்திரத்தினாலோ செப்பல். திருவார்த்தை கேட்டலாவது, நாத்தொனி கேட்டல். சிந்தித்தல் - இடையுறாது நினைத்தல். நினைத்தலை இறுதியில் வைத்ததின் சிறப்பை உணர்க.

குருவினால் தெளிவு உண்டாம் என்பதாம்.

140 தானே புலன் ஐந்துந் தன்வச மாயிருந்
தானே புலன் ஐந்துந் தன்வசம் போயிருந்
தானே புலன் ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே.

குறிப்புரை :- தன்வசமாதல் - புலன்ஐந்தும் ஆன்மாவின் வசமாதல். தன் வசம் போதல் - புலன்களின் நிலைகெடல். மடைமாறலாவது, புலன்வழிச்செல்லாது சிவத்தின் வழி நிற்றல்.

ஆன்மா தத்துவங்களை விட்டுச் சிவத்தைப் பொருந்தின போது புலன்களின் சேட்டையும் மாறும் என்பதாம்.

141 சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம் வாய்மையாற்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே.

குறிப்புரை :- சந்தித்தல் - தாள் தலைபெறுதல் திருமேனியைச் சிந்தித்தால் திருவடி உணர்வைச் சிரசில் பெறலாம் என்க. வந்திப்பது - புகழ்வது. வாய்மை - சத்தியம். உண்மையோடு நந்தியைப் புகழவேண்டும் என்க. போதம் - ஞானம். புகழ்ச்சியால் இருவினையும் சேரா என்க.

நந்தியைப் புகழ்ந்தால் ஞானம் உண்டாம் என்பதாம்.

142 போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினூர்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.

குறிப்புரை :- போதம் - ஞானம். ஞானத்தை நல்கும் பெருமானை அறிவினில் வைத்து வணங்க வேண்டும் என்க. நடம் - நடனம். நயனம் - அகக்கண். வேதம்-நாதம். விண்-ஆகாயம்.

நந்தியை அறிவினில் தியானித்தவர் நாதசம்யம் பெற்று ஆகாய மண்டலத்தில் விளங்குவர் என்பதாம்.

## 2. யாக்கை நிலையாமை

143 மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென் றிருந்தது * தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

குறிப்புரை :- மண் - மாயை. இருவகைப் பாத்திரம்- தூல சூக்கும சரீரங்கள். உடம்புக்கு மாயையே முதற் காரணமாம் என்க. திண்மை - வன்மை. மாந்தர் இறத்தல் என்பது, தூல உடம்பு அழிதலைக் குறித்தது. பச்சை மட்குடம் மழைநீரில் கரைந்து போவதுபோல் தூல உடம்பு தீயினில் அழியும் என்க.

யாக்கை நிலையாமை கூறியவாறு.

144 பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே.

குறிப்புரை :- பண்டம்பெய் கூரை-வினைக்கீடான உடம்பு. உண்ட - சுகபோகங்களை அனுபவித்த. பெண்டிரும் மக்களும் இறந்தபின் துணையாகார் என்க. விரதம் - நோன்பு. மண்டி- நெருங்கி.

உயிரோடு உடன்வருவது விரதமும் ஞானமும் ஆம் என்பதாம்.

---

* தீவினை என்பதும் பாடம்.

145 ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

குறிப்புரை :- ஒலிக்க அழுதல் - உரக்க அழுதல். பேரினை நீக்குதலாவது, உயிர் போனதும் உடம்புக்குரிய பெயர் இல்லையாதல். சூரையங்காடு - தூதுவளை படர்ந்தகாடு, முள்ளுடையது. நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே என்பது, இறந்தவர்க்கு முழுக்குப் போட்டார் என்றபடி.

உயிர் போனதும் அவரது நினைவும் இல்லாது போகும் என்பதாம்.

146 காலும் இரண்டு முகட்டல கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே.

குறிப்புரை :- காலும் இரண்டு - இரண்டு கால்கள். முகட்டலகு ஒன்றுள - மண்டை ஓடு ஒன்றுள்ளது. பாலுள் பருங்கழி - விலா எலும்பு. மேலுள கூரை - ஆகாய மண்டலத்தில் விளங்கும் சூக்கும உடம்பு. முன்போல் எனக் கூட்டுக.

உயிர் நீங்கினல் இவ்வுடம்பில் மீளவும் புக அறியாது என்பதாம்.

(தொடரும்)

---

## திருவண்ணுமலை

திருச்சிற்றம்பலம்

உண்ணுமுலை யுமையாளொடு முடனுகியவொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணுர்ந்தன வருவித்திரண் மழலைம்முழவதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

**திருச்சிற்றம்பலம்**

# ஆழ்வார் அழகநுபவம்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.

நம்மாழ்வார் :

ஒப்பற்ற இறையழகு கைபுனைந்தியற்றாப் பேரழகு, அந்த அழகை எல்லா அருளாளர்களும் அநுபவிக்கின்றனர்கள். நம்மாழ்வார் பரம்பொருளின் ஈடிணையற்ற அழகில் ஈடுபட்டுக் கவி இசைக்கின்றார். திருமுடியின் அழகினை அநுபவிக்கும் ஆழ்வார்,

“ முடிச் சோதியாய் உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ ”

என்கின்றார், அடுத்துத் திருவடியழகு அவர் திருவுள்ளத்தைக் கவர்கின்றது.

“ அடிச்சோதி நீ நின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ ”

என்று கசிகின்றார். ஒவ்வோர் உறுப்பின் அழகுமே அநுபவத் திற்குப் போதும்; வேறுஉறுப்புக்குச் செல்லுதல் வேண்டாமே, என்ற தடை உரையாசிரியர்க்குத் தோன்றுகின்றது.

கம்பநாடர் பாலகாண்டத்து உலாவியற் படலத்தில் இராமன் பேரழகை அனைவரும் அனுபவிக்கின்ற அழகைக் கூறும் இனிய கவிதை இங்கே நினைவிற்கு வராமற்போகாது:

“ தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலமன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாருமஃதே

வாள் கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னான்
உருவுகண்டாரை யொத்தார் "


ஓர் அழகு மற்றோரழகிலே கொண்டு செலுத்தப் போகின்றார்கள் அல்லது, முற்றும் அநுபவித்தபின் போகின்றார்கள் அல்லர், கடலிலே ஒருதுரும்பு விழுந்தால் அஃது அலைதோறும் தள்ளப்பட்டுத் தள்ளப்பட்டு அலையுமாறு போன்று ஓரழகு ஓரழகிலே தள்ளக்கிடந்து அனுபவிக்கிறார்இதில் என்கின்றது ஈட்டுரை.

" கட்டுரைக்கில் தாமரை நின்
கண் பாதம் தனையொவ்வா; "

" பெருமானே ! நின் திருக்கண்கள், திருப்பாதங்கள் திருக்கைகள் ஆகியவற்றிற்குத் தாமரை ஒப்பாக மாட்டாது " என்கின்றார் ஆழ்வார், நீரிலே முழுகுகின்றவர்கள் குமிழி மேலே தோன்றுமாறு தரைமட்டும் முழுகுவார்கள். அதுபோன்று ஆழ்ந்து நோக்குமிடத்துச் 'சொல்ல முடியாது' என்பதனை விளக்குவாராய்க் 'கட்டுரைக்கில்' என்கின்றார் ஆழ்வார். தாமரைச்சாதியே ஒப்பாகாது என்பாராக 'தாமரை' என்று அடைகொடுத்து விதந்து கூறுது வாளா கூறுகின்றார். தனித் தனியே ஒவ்வோர் உறுப்பிற்கும் கூட ஒப்பாகமாட்டாது என்பாராக' கண், பாதம், கை, என்று தனித்தனியாக் கூறுகின்றார். குளிர நோகுவன கண்கள், நோக்கிற்குத் தோற்று விழுமிடம் திருவடிகள், விழுந்தவனை எடுத்து அணைப்பன திருக்கரங்கள் ஆதலின் இம்முறையே ஓதுகிறார் " என்று இவற்றின் முறைவைப்பு அழகிலே மூழ்கி முத்தெடுக்கின்றார் பேருரைக்காரர். முறையில்லாமல் இவ்வாறு கூறப் பெற்றுள்ளமைக்கு மற்றோர் உள்நோக்கமும் உரைக்கலாம்; " மேற்பட்ட பக்தியை உடையவனுக்குச் சாஸ்திரம் இல்லை. முறையும் இல்லை " ஆதலின் இவர் திருவாயிலும் முறைகெட வருகிறது என்றும் கொள்ளலாம் என்பர் அவர்,

" சுட்டுரைத்த நன்பொன் உன்
திருமேனி ஒளி ஒவ்வா "

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

என்பது அடுத்தவரியிலே ஆழ்வாரது அழகநுபவம் காய்ச்சி ஓடவைத்து உரைத்த நன்றான பொன்உடைய தன்மையான திருமேனி ஒளிக்கு ஒப்பாகாது ' என்பது பொருள். இயல்பான பொன் உவமையாகச் சொல்லத்தகுந்ததன்று என்ற திருவுள்ளக் குறிப்பு, சுட்டு, உரைத்த, நன் என்ற மூன்று அடைச் சொற்களால் விளங்குகின்றது.

" தொட்டுரைத்திவ் வுலகுன்னைப்
புகழ்வெல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே
காட்டுபால் பரஞ்சோதீ "

பாட்டு நிறைவுறுகின்றது. இவ்வுலகத்தார் பேசுவன வெல்லாம், உள்ளதும் இல்லதும் கூறுவதாய்ப் புன்மையே குறித்திடும் என்பது கருத்து.

நீ எல்லாவற்றிற்கும் மேம்பட்டு மேலான ஒளி உருவனாக இருக்கின்றாய். நின்னைத் தவிரப் பின்னர் வேறொரு மேலான ஒளி உருவம் உடைய பொருள் இல்லாததனாலே உவமைநீங்கி நடக்கின்ற பரஞ்சோதியும் நீயே; பரந்த உலகங்களை யெல்லாம் நின்னுள்ளே உண்டாக்கிய பரஞ்சோதியே! கோவிந்தா! உன்னுடைய பண்புகளை உரைப்பதற்கு ஆற்றலுடையேன் அல்லேன் என்று பின்னர்ப் பேசி முடிக்கின்றார் சடகோபர் :

" பரஞ்சோதி நீபரமாய்
நின்னிகழ்ந்து பின்மற்றோர்
பரஞ்சோதி இன்மையின்
படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே
படருலகம் படைத்தஎம்
பரஞ்சோதி கோவிந்தா
பண்புரைக்க மாட்டேனே "

எவ்வளவு எடுத்துரைத்தும் பரம்பொருளின் பேரழகு அவரால் உரைத்து முடித்திட முடியாவண்ணம் உடையதாக விளங்குதலின் அவரது ஆற்றாமை, 'பண்புரைக்க மாட்டேனே' என்ற சொற்களில் சுடர்விடுகின்றது.

தான்காந் திருவாய் மொழியிலே, கூறிக் கூறிக் குளிர்ந்து நிற்கும் ஆழ்வார்,

“ பங்கயக் கண்ணன் என்கோ
பவளச்செவ் வாயன் என்கோ
அங்கதிர் அடியன் என்கோ
அஞ்சன வண்ணன் என்கோ
செங்கதிர் முடியன் என்கோ
திருமறு மார்பன் என்கோ
சங்குசக் கரத்தன் என்கோ
சாதிமா ணிக்கத் தையே ” (4-3)

என்று உருகுகின்றார் உலகமாய் நிற்பதோடு திருவுருவ மாயும் நிற்கும் பேரழகிலே வியந்து நிற்கும் நிலை இது.

தம்மோடு முதலில் உறவுசெய்த கண்ணை முதலில் மொழிந்தார். அந்நோக்குக்குத் தப்பினாலும் தப்பவொண்ணாத முறுவலை கூறினார் அடுத்து. நோக்குக்கும் புன்முறுவற்கும் தோற்றார் விழும் நிலத்தைக் கூறினார் பின்னர், அத் திருவடி களிலே விழுந்தார்க்கு அனுபவிக்கக் கூடிய வடிவைக் கூறினார் பின். இவ்வாறு முறைவைப்புக் காட்டிக் களிபேருவகை உண்டாக்குகிறார் முப்பத்தாறாயிரப் பெருக்கர்.

அழகனுபவத்திலே சுவையனுபவமும் சேர்கின்றது. அழகிலே ஈடுபட்டுப் பின்னர் அனுபவித்துக் கண்ட சுவை அநுபவம் சொல்லிறந்து தோன்றுகின்றது அருளாசிரியர்க்கு, இனியகவிதை பெருக்கெடுக்கின்றது:

“ அச்சுதன் அமலன் என்கோ
அடியவர் வினை கெடுக்கும்
நச்சுமா மருந்தம் என்கோ
நலங்கடல் அமுதம் என்கோ
அச்சுவைக் கட்டி என்கோ
அறுசுவை யடிசில் என்கோ
நெய்ச்சுவைத் தேறல் என்கோ
கனியென்கோ பாலென்கோனே ” (4-5)

என் உயிர், செவிகள் வயிறு நிறையும்படியாக நின்னுடைய புகழின் உருவமான கனியென்னும் கவிதைகளை, அவ்வக் காலங்கட்குரிய பண்களாகிய தேனைக் கலந்து அநுபவித்துப் பூமியின்மேல் அழகிய சக்கரத்தை உடைய உன்னையே இடை விடாது ஆதரிக்கின்றது என்கின்றார் பின், (8-6)

" செவிகளால் ஆர நின் கீர்த்திக் கனியெனும்
கவிகளே காலப்பண் தேனுறைப்பத் துற்றுப்
புவியின்மேல் பொன்னெடுஞ் சக்கரத் துன்னையே
அவிவின்றி ஆதரிக்கும் மெனது ஆவியே "

என்பது அது. " செருக்கராயிருக்கும் ராஜபுத்திரர்கள் நல்ல பழங்களைத் தேனிலே தோய்த்து உண்ணுமாறு போன்று, உன் கீர்த்தியாகிற கனிகளைக் காலங்கட்கு அடைத்த பண்களாகிற தேனிலே, அத்தேன் மிஞ்சும்படிக் கலந்து அநுபவித்து " என்பது ஈடு. புகழைக் கனியாக்கி, அக்கனிகளோடு பண்ணுக்கிய தேனைக் கலந்து சுவைத்தல் என்பது தான் எத்துணை நலம் பொருந்திய விளக்கம்! " காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள் " என்று கவிஞன் கம்பன் தரும் கருத்துரை இங்கே நினைவில் நிழலாடுகின்றதன்றோ! பண் கலந்த பாட்டிலே இறையழகை எடுத்துப்பேசி மகிழும் இனிய பேறு இங்கே எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது என்று கூறலாம் 'பண் களிகூர்தரு பாடலோடு ஆடல்' என்ற மணிவாசகர் மாண்புறு வாக்கு இங்கே மனங்கொளத் தக்கதாகும். 'பொருள்சேர் புகழ்' என்று குறளாற் புகழப்பெற்ற மெய்ப் புகழைக் கவிதையாக்கி, அதனோடு பண்ணும் கூட்டி அநுபவித்தல் ஆழ்வார்கள் முதலிய அருளாளர்கட்கு என்றும் இயல்பாகும். 'பாடும் பணியே பணியா அருள்வாய்' என்று முருகன் திருவடிகளிற் கசிந்துருகி நின்ற அருணகிரியார் விண்ணப்பம் செய்யும் பகுதி நினைக்கத்தக்கது. அவ்வாறு 'ஆடிப் பாடிக் கைதொழ உள்ள வினைகள் ஓடிப்போம்' என்று பயனும் காட்டுகின்றனர் நம் பைந்தமிழ்ச் சான்றோர்.

(தொடரும்)

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
# காசியாத்திரை அநுபவங்கள்

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

( மலர் 29. இதழ் 11. பக்கம் 615 இன் தொடர்ச்சி )

## பிரயாகை - அலகாபாத்

இலகாபாத் என வடநாட்டினர் வழங்குகின்றனர். பிரயாகை, திரிவேணி சங்கமம் எனவும் சொல்லுவர். கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் கூடுமிடம். இப்போது சரஸ்வதி நதி மறைந்துவந்து கூடுவதாகச் சொல் லப்படுகிறது. சதுத்ரி என்னும் நதி இங்குக் கூடுவதாக வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிவல்லுனர் கள் பஞ்சநதி தீரத்தில் ஆருவது நதியாக இந்தச் சரஸ்வதி நதியும் இமயத்திலிருந்து வெளிவந்து ராஜஸ்தானம் வழி யாக ஓடி இங்குப் பிரயாகையில வந்து கங்கை யமுனையோடு கூடியதாகக் கண்டு அதற்குரிய ஆதாரங்களையும் காட்டியிருக் கிருர்கள். கங்கை வெண்ணிறத்திலும் யமுனை கருநிறத்தி லும் சரஸ்வதி சிகப்பு நிறத்திலும் வந்து கூடுவதாகவும் வரலாறு இதனைத் திருவாரூர்த் தியாகேசனுடைய (சோமாஸ் கந்தராக) திருவுருவாகக் கண்டு வழிபட்டது குமரகுருபரரின் அருளுள்ளம்.

" தம்மேனி வெண்பொடியால் தண்ணளியா லாரூரர்
செம்மேனி, கங்கைத் திருநதியே - அம்மேனி
மானேயமுனை வந்த வாணிநதி யும்குமரன்
தானே குடைவேம் தனித்து. "

" வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடுமாடத்து
ஒண்கதிர் வயிரமும் தண்கதிர் நீலமும்
சேயொளி பரப்பும் செம்மணிக் குழாமும்

மாயிருள் துரந்து மழகதிர் எறிப்பச்
சுரநதி முதல வரநதி மூன்றும்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப......"

வேத காலத்துக்கு முன்னேயே இத் தீர்த்தமும் சிறப்புற்று விளங்கிவருகிறது. "வெண்மையான கங்கை, கருப்பான யமுனை என்ற இருநதிகள் எங்குக் கூடுகின்றனவோ அங்கு ஸ்நாநம் செய்தவர் முத்தி அடைவர். அங்கு சரீரத்தை விட்டவர்கள் ஸ்வர்க்கத்தை அடைவர்", என்று ரிக்வேதத்திலும்,

"கங்கா, யமுனு, சரஸ்வதி, சதுத்ரி, என்ற புண்ணிய நதிகளே! நீவிர் என்னுடைய பாபக்குவியலை நீக்கி என்னைப் பரிசுத்தனுகச் செய்வீர்களாக", என்று யஜுர்வேத அகமர்ஷண சூக்தத்திலும்,

"துஷ்யந்தன் குமாரனுன பரதன் யமுனு நதிக்கரையில் எழுபத்தெட்டு அசுவமேத யாகங்களையும் கங்கையின்கரையில் ஐம்பத்தைந்து அசுவமேத யாகங்களையும் செய்தான்" என்று ஐத்ரேயபிரமாணத்திலும், மேலும் கங்கை யமுனை நதிகளின் வர்ணனைகள் அவற்றில் மூழ்கினேர் அடையும் பயன்களையும் பிரமன் முதலிய தேவர்கள் இங்கு மூழ்கிப்பெற்ற பேறுகளையும் விரித்துச் சொல்லுகின்றன. பிரயாகை என்ருல் நதிகள் கூடுமிடம் என்பது பொருள். திரிவேணி என்ருல் மூன்று நதிகள். ஆகவே மூன்று நதிகள் சந்திக்கும் இடம் என்ற பொருளில் இந்த க்ஷேத்திரம் பெயர்பெறுகிறது.

இங்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேளா ஒன்று நடைபெறுகிறது. கும்பத்தில் குரு இருக்கும் காலம் என்பர். பல லட்சக்கணக்கான மக்கள் அப்பொழுது இங்கு மூழ்குவதற்கு வருவார்கள். அதன் தனிச்சிறப்பு பல்லாயிர மாமுனிவர்கள் இமயப்பகுதியிலிருந்தும் நமது பாரததேசத்தின் பலபகுதிகளிலிருந்தும் வந்து அந்த சங்கிரமண காலத்தில் முதலில் சங்கமமாகும் இடத்தில் நீரில்மூழ்குவர். அவர்களைத் தரிசித்து அவர்கள் மூழ்கி எழுந்த தீர்த்தத்தில் மூழ்கிப் பயன்பெறுவர் மக்கள். இவையல்லாது ஆண்டுதோறும் சூரிய சந்திர கிரகணங்கள், தனுர்மாத சங்கிராந்தி

நாட்களிலும் பல்லாயிரவர் வந்து மூழ்குவர். ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை அர்த்தமேளா என்ற ஒன்றுமுண்டு. பாரத்வாஜ மாமுனிவரின் ஆஸ்ரமம் இங்குத்தான் இருந்தது. இப்பொழுதும் அங்குச் சென்று வழிபட்டுவருவர். பாரதத்தில் கூறப்படும் அரக்குமாளிகை இவ்வூருகேதான் அமைக்கப் பட்டிருந்ததென்றும் சொல்லுகிறார்கள், தம்பதிகளாக வருவோர் நாளும் சங்கமத்தில் படகில் சென்று வேணிதானம் செய்து மகிழ்வதைப் பார்க்கலாம். பண்டாக்கள் தொல்லை அதிகம். சர்வகலாசாலை, உயர்நீதிமன்றம் முதலியன உண்டு. இங்கிருந்து காசிக்கு Broad gauge, Metre gauge இரு வழிகளிலும் ரயிலில் போகலாம். மற்றும் சாலைவழியாகவும் போகலாம். 120 மைலுக்குள் உள்ளது. பாரதத்தின் முடிசூடா மன்னரான மாந்தருள்மாணிக்கம் எனப் புகழுடன் வாழ்ந்த நமது முதல் பிரதம மந்திரி ஜவகர் பிறந்து வளர்ந்ததும் இவ்வூரே. அவர் மகள்தானே இன்றும் நமது பாரதப் பிரதமர்.

இதனை முடிப்பதற்கு முன்னம்: யமுனஷ்டகம் என்னும் காவியத்தின் சுருக்கம் இங்கு சிந்தித்தல் பொருந்தும் :-

உயிர்களுக்கு உறும் மும்மலங்களையும் போக்குபவள்: சகல பாதகங்களையும் நீக்கும் சர்வவல்லமையுடையவள்; எப்பொழுதும் நறுமணம் வீசும் நந்தனத்தில் பெருகி ஓடி வருவதால் நறுமணமுடையவள். ஹிதமானவள்; மிருதுவானவள்; தன்னுடைய அலைக்கரங்களால் மக்களை அரவணைத்து பஞ்சபூதங்களாலும் உண்டாகும் அச்சத்தைப் போக்குபவள்: மாருத புதுமையும் குறையாத இனிமையும் உடையவளாகிய யமுனதேவி சாதகப் பறவைகள் எவ்விதம் மிகுந்த ஆர்வத்தோடு விசும்பில் விழும் மழை நீர்த்துளிகளை எதிர்பார்த்திருக்குமோ அதே நிலையில் தம்மை நாடிவரும் பக்தர்களுக்கும் இதம்செய்ய ஆர்வத்தோடு உள்ளாள்; தன் கரையில் வசிப்பவர்களுக்கு நல்லதொரு அடிமை எவ்விதம் தன் எஜமானனுக்கு ஏவாதேகாலமறிந்து இடனறிந்து உற்றது செய்வானோ அவ்விதம் அவர்கள் தேவைகளை அறிந்து தன் வளப்பத்தால் பூர்த்திசெய்பவள்; உடலுக்கு இனிமைதரும் மென்காற்றை உடையவள்; தோத்தரித்து வழிபடத் தகுந்தவள்; அழகிய நீர்ப்பெருக்கை உடையவள்; அலங்காரமான

நடையுடையவள்; நதி, நதம் (பெண் ஆறு, ஆண் ஆறு) களின் பாபங்களைத் தன் நீர்ப்பெருக்கினுல் அழித்துப் பெருமை யுறுபவள்; தன் அலைக்கரங்களால் தன் கரைகளைத் தொட்டுத் தடவி மகிழும் அன்னையவள்;

எப்பொழுதும் கருநிறத்தோடு இருப்பவள்; சரத்காலச் சந்திரனுடைய வெண்மையான (கலப்பில்லாத தூய்மையான மனத்தில் மகிழ்ச்சி யூட்டக்கூடிய) கீர்த்தியை உடையவள், கடவுளர்க்கு அர்ச்சிக்கக்கூடிய புனிதமான நீரை உடையவள் ஆகையால் பரிசுத்தமானவள்; பரந்த போக்குடையவள்; நிலத்தில் ஆடி மகிழ்ந்த ராதாருக்மணி யிவர்கள் காண கிருஷ்ணபகவானை அணைந்து மகிழ்ந்தவள். ஜலக்ரீடையில் விஷ்ணு (கிருஷ்ணன்) வின் அங்கங்களில் பட்டு அங்கராகங் களை (சுவை) உடையவள். ஜலக்ரீடையில் கோபிகாஸ்திரீ களின் அங்கராகங்களைப்பெற்றவள்; அவர்கள் அணிந்துவந்த சம்பக மாலையின் மணத்தை ஏற்றவள்; தன்னைவிட்டு நீங்க மனமில்லாது தன்னிலே ஒன்றியிருந்து மூழ்கி அந்த நலத் தையே பெருக்கிக்கொள்ளும் கண்ணன் அவன் திருமேனி பட்ட அருளாய தன் தண்ணீரில் எப்போதும் நாரதமுனி போன்ற மகான்களும் அமிழ்ந்து அதனுள்ளேயிருந்து மகிழும் இனிமையும் பெருமையும் உடையவள்; தேவிபராசக்தியின் நந்தனத்தில் தோய்ந்து விளையாடுபவள்; தன்கரைகளில் விளையும் நெல் முதலிய தானியங்களையும் மல்லிகை, சம்பகம் முதலிய மலர்களின் மகரந்தங்களையும் வாரி அணைத்தெடுத்து வருபவள்; தன்னிடம் விரும்பி வந்து மூழ்கும் மாந்தர்களின் கடல்போன்ற சம்சாரக் கட்டிலிருந்து விடுவித்து என்றும் மாருத பேரின்பத்தை வாரி வழங்குபவள்.

**யமுனஷ்டகம் :**

1. முராரிகாய காலிமா லலாமவாரி தாரிணீ
த்ருணீகிருத த்ரிவிஷ்டபா த்ரிலோக சோகஹாரிணீ
மனேனுகூலகூல குஞ்சபுஞ்ச தூததுர்மதா
துனேது மே மனேமலம் கலிந்த நந்தினீ சதா

2. மலாபஹாரி வாரிபூர பூரி மண்டிதாமிருதா
ப்ருசம் ப்ரபாதக ப்ரபஞ்சநாதி பண்டிதானிசம்
ஸுனந்த நந்னுங்க ஸங்கராக ரஞ்சிதாஹிதா
துனேதுமே மனேமலம் கலிந்த நந்தினீ சதா

3. லஸத்தரங்க சங்கதூத பூதஜாத பாதகா
நவீன மாதுரீ துரீண பக்திஜாத சாதகா
தடாந்தவாச தாசஹம்ச சம்ப்ரமா ஹி காமதா
துனேதுமே மனேமலம் ............ சதா

4. விஹார ராஸபேதபேத தீரதீர மாருதா
கதாகிராமகோசரே யதீய னீரசாருதா
பிரவாக ஸாஹசர்ய பூதமேதினீ நதீநதா
துனேதுமே ............ சதா

5. தரங்க சங்க ஸைகதாந்த ரஞ்சிதர சதாஸிதா
சரந்நிசா கராம்சு மஞ்சு மஞ்சரீ ஸபாசிதா
பவார்ச்சனு ப்ரசரருணும் புனுதுனு விசாரதா
துனே............ சதா

6. ஜலாந்த கேளி காரி சாருராதி காங்கராகிணீ
ஸ்வபர்த்து ரன்யதுர் லபாங்கதாம் கதாம்ச பாகினீ
ஸ்வதத்த சப்த சப்த சிந்து பேதனுதி கோவிதா
துனே ............ சதா

7. ஜலச்சுதா ச்யுதாங்க ராக லம்படாலி சாலினீ
விசேலராதிகா கசாந்த சம்பகாலி மாலினீ
சதாவகாஹநாவதீர்ண பர்த்ரு ப்ருத்திய நர்மதா
துனே ............... சதா

8. சதைவ நந்தநந்த கேளி சாலிகுஞ்ச மஞ்சுளா
தடோத்த புல்ல மல்லிகா கதம்பரேணு ஸுஜ்வலா
ஜலாவகா ஹினும் நருணும் பவாப்தி சிந்து பாரதா
துனே ............ சதா

(தொடரும்)

# STUDIES IN SAIVA SIDDHANTA

[ Part II ]

By Thiru J. M. Nallasvami Pillai, B. A., B. L.

## I. FLOWER AND FRAGRANCE

### A FLORAL WREATH

What is there in Nature so full of beauty and so symbolic of the heart's purity, innocence, and love and joy, as the tiniest flower of the field? What reflects the great Divine Beauty and the Divine Loveliness and the Divine Harmony more than the lowliest blossom of the dale? The freshness, the symmetry and the delicate tracery of those flowers, how they appeal to man's inmost nature and how inspiriting they are! Need we wonder therefore that they have attracted, not more than what they are entitled to, we should say, the attention and love of the Oriental; and they enter largely into his enjoyments, his Religion and Philosophy. They hold a considerable place in Oriental symbology, and the Indian has loved to illustrate his great truths from flowers. No ceremonies can be performed without flowers; and he loves to deck with them the Presence of his Heavenly Father and he calls out to his brethern,

சித்தந் தெளிவீர்காள்
அத்தனாரூரை
பத்திமலர் தூவ
முத்தியாகுமே

O Ye who wish to attain Peace of mind
If Ye, our Father of Arur, worship
With Flowers of Bhakti,
Then will Ye attain Mukti. — (Devaram)

The flower in its three-fold character of flower, colour and fragrance appeals to him as the visible presence of That which is Sat, Chit and Ananda.

> " பூவண்ணம் பூவின்மணம் போல மெய்ப்போதவின்ப
> மாவண்ண மெய்க்கொண்டவன்,"

> " Like the flower, its colour and its fragrance
> The Lord as Sat, Chit and Ananda assumes form, "

Says the author of "Tiruvilaiyadal Puran," a work, by the way, noted for its charming diction and great powers of clear description.

Our Saint Appar addresses this Divine Form as 'O! Thou cow, the five products of the cow, O! Thou intelligence, Thou agni, Thou sacrificial food, Thou tongue, words proceeding from the tongue, Thou Lord, present in the heart of the four Vedas, *Thou flower, fragrance present in the flower. Thou joy of flower* present in the hearts of the freed, Thou Deva, Deva of of Devas, Thou Effulgent Sun, Lo! Such is Thy Divine Presence".

To the philosophic and highly devout Manikka-vachaka, the delicate connection of the flower and its fragrance has appealed in another light and he sings of "His greatness, in filling all inseparably and surpassingly *like the fragrance of the flower*".

> " பூவினுற்றம் போன்றுயர்ந்தெங்கு
> மொழிவறநிறைந்து மேவியபெருமை."

In another place, he compares this very connection to the connection of body and soul

and in comparing both to the connection of the Param, distinguishes them at the same time :

உற்ற வாக்கையி னுறுபொருள் நறுமல
ரெழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொற் றெளியாமே
யத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே,

"Like the soul present in the body, and the fragrance in the flower, The Supreme (Param) pervades them and *surpasses* all. The fools, not perceiving this truth, simply delight in enjoying the fruits of their own Karma. The words of these, my Father has taught me not to listen, by making me his slave and has drawn me to the society of his Bhaktas. This miracle has been permitted to me to see!"

Though God's connection with us is compared to the connection of the soul and the body, yet in this case, the omnipresence of the soul is still confined to thc body and the connection yields the soul only a fancied pleasure, and not a real and lasting one, differing thereby from the Supreme who pervades all and who is all Love and all Bliss, ready to impart this Love and Bliss to those who understand him as such; and when this undying love (அயரா அன்பு) is possessed, then, that very moment, "the fragrance of Sivam (Love, Ananda) will blow out of the flower of Jiva",

"சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது."

(Tirumular)

That great Yogin, Tirumular, is very prolific in the use of the simile of the flower, and amidst a variety of such we select one in which he piles his flowers (of Rhetoric) thick, one over the other, to express the omnipresence of the most Supreme:

"My Lord and my King is present, united in all, like feeling in air, sugar in the cane, butter in milk and the sweet juice in the fruit and *the fragrance in the blossom*",

> " காலினூறும் கரும்பினிற் கட்டியும்
> பாலினுள் நெய்யும், பழத்து ளிரதமும்
> பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
> காவல னெங்கும் கலந்து நின்றானே."

Our Saint Tayumanavar, whose felicity in epithets and phrase-making, we will some-day illustrate, uses most happy language in this connection, in invoking that Rock of Love:

"O! Thou support of the devoted who attain to the limitless Yoga-Samadi by the *one word* (of their Divine Guru), when they view this vast world as the Supreme Bliss! O! Though loving friend of even my lowly self! O! Thou Rock of joy, uniting with and showing in all bodies and the world and the souls, like the *fragrance playing on the half-blown flower* shaped like the half-parted, elegant and sweet-toned tinkling bells on children's feet".

The comparison of the half-opened flower (in the jasmine for instance) in which the fragrance is the sweetest and sharpest, to the sweet bells with half-parted mouths tied round children's feet, is most happy and delicious.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,
**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

( மலர் 29, இதழ் 10, பக்கம் 530 இன் தொடர்ச்சி )

इच्छाशक्त्यादि नळान्त मनन्तासन मीरितम् ।
गुणान्तं धर्मज्ञानादि सिंह्माख्यमासनं विदुः ॥
योगासनं तु तत्ख्यातं परमेशस्य सुव्रत ।
पद्मग्रन्धि समारभ्य केसरान्ताब्ज मासनम् ॥
शक्त्यन्तं केसरादूर्ध्वं कर्णिका विमलासनम् ।
एव मब्जासनं कल्प्य पूजयेत्स्वस्व नामभिः ॥

— सुप्रभेदम्

ஆதாரசக்தி முதல் நாளம் வரையில் அநந்தாஸனம். தரும முதல் குணம் வரையில் சிம்மாஸனம். அதற்குமேல் பத்மக்ரந்தி வரையில் யோகாஸனம். அதற்குமேல் கேஸரம் வரையில் பத்மாஸனம். அதற்குமேல் கர்ணிகையானது விமலாஸனம். இவ்வாறு ஐந்து ஆஸனம் கூறப்படுகிறது. சுப்ரபேதம்.

அநந்தாஸனம் – பிருதிவி. சிம்மாஸனம் - அப்பு. யோகாஸனம் – தேயு. பத்மாஸனம் – வாயு. விமலாஸனம் – ஆகாயம்.

— சந்திரஞானம்.

இவ்வாறு பஞ்சாஸனபூஜைசெய்து வித்யாதேஹகல்பனம் செய்யவேண்டியதற்கு தண்டபங்கி முதலிய நியாஸங்களைச் செய்யவேண்டும்.

நியாஸம் என்பது மந்திரங்களைக்கொண்டு நிஷ்களமாய் இருக்கும் மூர்த்திக்கு பூஜையின்பொருட்டு ஸகளமாகச் செய்தலாம்.

தண்டபங்கி, முண்டபங்கி, வக்த்ரபங்கி, கலாபங்கி, அஷ்டத்ரிம்சத்கலா நியாஸம் இவைகள் வித்யாமயமாகக் கற்பிக்கப்படும் இறைவனின் பாஹ்ய அங்கங்களைக் கற்பித்தல். இதுபோல் ஆறு அத்வாக்களாலும் அந்தரவயவங்களைக் கற்பிக்கவேண்டும்.

मंत्राध्वा च पदाध्वा च वर्णाध्वा भुवनाध्वकः ।
तत्वाध्वा च कलाध्वा च षडध्वान इमे मताः ॥
चतुर्विंशत्युत्तरं यत् भुवनानां शतद्वयम् ।
भुवनाध्वा ससंचिन्त्यो रोमवृन्दात्मना विभोः ॥
पञ्चाशद्रुद्र रूपैश्च वर्णैर्वर्णाध्व कल्पना ।
असौ त्वगात्मनाचिन्त्यो देवदेवस्य शूलिनः ॥
रुधिराध्वातु मन्त्राध्वा विचिन्त्यः पार्वतीपतेः ।
पदाध्वाचिन्तनीयस्स्यात्सिरा मांसतयाविभोः ॥
प्रथिव्यादीनि षट्त्रिंशत्तत्वान्यागमवेदिभिः ।
उक्तान्यमीभिरस्तत्वाध्वा शुक्रमज्जस्थिरूपभृत् ॥

— शिवार्चना चंद्रिका

மந்த்ராத்வா, பதாத்வா, வர்ணாத்வா, புவனாத்வா, தத்வாத்வா, கலாத்வா என அத்வாக்கள் ஆறு. புவனாத்துவாவினுள் இருநூற்று இருபத்துநான்கு புவனங்களும் இறைவனுக்கு உரோமங்களாகும். வர்ணாத்துவாவினுள் உருத்திரரூபங்களான ஐம்பது அக்ஷரங்களும் இறைவனுக்குத் தோலாகும். மந்திராத்துவா எனப்படும் பதினொரு மந்திரங்களும் இறைவனுக்குக் குருதியாகும். பதாத்துவா எனப்படும் எண்பத்தொருபதங்களும் இறைவனுக்கு நரம்பு, மாமிசதாது இவைகளாகும். தத்துவாத்துவா எனப்படும் ப்ருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களும் இறைவனுக்கு சுக்லதாது. மஜ்ஜை என்னும் தாது எலும்பு என்ற தாதுவாகும்.

— சிவார்ச்சனசந்திரிகை.

இவ்வாறு நியாஸம் செய்து ரூபத்தியானம் செய்ய வேண்டும்.

பத்துக்கைகளுடன், ஐந்துமுகங்களுடன் வலது கைகளில் சூலம், வஜ்ரம், கத்தி, பரசு, அபயம் என்றவைகளையும், இடது கைகளில் பாம்பு, பாசம், மணி, அங்குசம், அக்னி இவைகளையும் தரித்தவராய் முப்பத்திரண்டு லக்ஷணம் பொருந்தியவராய் இருப்பவராகத்தியானிக்கவேண்டும். தியானம் செய்யும்போது இலிங்கம் என்ற புத்தி நீங்கி தேவியுடன் கூடிநிற்கும் இறைவனே தோன்றவேண்டும்.

முப்பத்திரண்டு இலக்ஷணம் :— ஐந்து அவயங்கள் நீண்டும், நான்கு அவயவம் குறுகியும், ஐந்து அவயவம் சூக்ஷ்மமாயும், ஏழு அவயவம் சிகப்பாயும், ஆறு அவயவம் உயரமாயும், மூன்று அவயவம் கம்பீரமாயும், இரண்டு அவயவம் விஸ்தீர்ணமாகவும் இருக்கவேண்டும். அதாவது கை, கண், முழங்கால், மூக்கு, மார்பு இவ்வைந்தும் நீண்டதாக இருக்கவேண்டும். முகவாய்க்கட்டை, ப்ரஜனனம், ப்ருஷ்டம், தண்டுக்கால் இந்த நான்கும் குறுகியதாக இருக்கவேண்டும். விரல், பர்வாக்கள், கேசம், தந்தம், நகம், இவ்வைந்தும் சூக்ஷ்மமாக இருக்கவேண்டும். கக்ஷம், குக்ஷி, மார்பு, மூக்குநுனி, தோள், நெற்றி இந்த ஆறும் உயரமாக இருக்கவேண்டும். கால், கை, உதடுகள், நா, கண், காது, தோல் இந்த ஏழும் சிகப்பாக இருக்கவேண்டும், குரல், பலம், நாபி இவை கம்பீரமாக இருக்கவேண்டும்.

சிரஸ், நெற்றி இது விஸ்தீர்ணமாக இருக்கவேண்டும்.

— வாதுளாகமம்.

ஆவாஹனம் :

சரீரத்தைச் செவ்வையாக நேரே நிறுத்தி பஞ்சேந்திரியங்களின் வியாபாரத்தைத் தடுத்து கைகளில் புஷ்பங்களை நிறைத்து, அஞ்சலிசெய்து தன்னுடைய மூலாதாரத்தில் வைத்து அதில் பற்றிய மனமுடையவராய் இடநாடியில் வாயுவைப் பூரித்து கும்பகம் செய்து ஷோடச கலையுடன்கூடிய மூலமந்திரத்தைத் துவாதசாந்தமளவாக உச்சரித்து தன்னுடைய சரீரத்துள்ள மூலாதாரத்திலிருக்கும் மந்திரமயமான பரமசிவனுடைய தேஜஸை ஆகர்ஷணம் செய்து கிரமமாக உயரக்கொண்டுவந்து இருதய ஸ்தானத்தில் சற்று நின்று

மூலமந்திரத்தில் அகாரத்தை விட்டு அதனால் பிரமத்யாகஞ் செய்து மேல்கண்ட ஸ்தானத்தில் நின்று உகாரத்தை விட்டு விஷ்ணு தியாகம்செய்து மேல்தாலு ஸ்தரனத்தில் நின்று மகாரத்தைவிட்டு உருத்ர தியாகம் செய்து மேல் புருவநடுவில் விந்து ஸ்தானத்தில் நின்று விந்துவை விட்டு ஈச்வர தியாகம் செய்து மேல் பிரும்மரந்திர ஸ்தானத்தில் நின்று நாதத்தை விட்டு சதாசிவத்தியாகம் செய்து மேல் சப்த்த ஸ்தானமாகிய துவாதசாந்தத்தில் நின்று உன்மன்யந்தத்தில் அநேககோடி சூரிய ப்ரகாசமாய் விளங்கும் பரமசிவனிடத்தில் மூலாதாரத்தி னின்று கொண்டுவந்த மந்த்ர ரூபமான ஜோதியைச் சேர்த்து ஆன்மாவும் ஜ்யோதிரூபமாகிய சிவமும் இரண்டறக்கலந்து கோடி சூர்யப்ரகாசமாய் விளங்கியதாகச் சிந்தித்து இடை விடாது அமிருதத்தைப் பெருக்கும் விந்து ரூபமான ஜோதியை (புஷ்பாஞ்சலியுடன்) கீழே கொணர்ந்து புருவமத்தியிலிருக்கும் விந்துஸ்தானத்தில் சற்றுநேரம் நின்று சகளவடிவம்கொண்டு ஆயிரம் சரத்கால சந்திரன்போல் பிரகாசிக்கிறதாகப் பாவித்து பின் புஷ்பாஞ்சலியை இருதயஸ்தானத்திலிறக்கி (முன் இட நாடியில் வாயுவைப் பூரித்துக் கும்பித்ததை) பிங்களநாடியால் வாயுவை ரேசகம் செய்து (வெளியேவிட்டு) வாயுவுடன் பரம சிவனுடைய ஜோதியை புஷ்பாஞ்சலியின் நடுவே யடைந்த தாகப் பாவனைசெய்து இலிங்கத்தின் சிரசில் சத்யோஜாதம் முதலிய பஞ்சப்பிரம மந்திரங்களால் ஆவாஹனம், ஸ்தாபனம், சன்னிதானம், நிரோதனம், அவகுண்டனம் செய்து மூல மந்திரத்தினால் அமிருதீகரணம் செய்து, மஹாதேவ ! சுகமாக எழுந்தருளியிருக்கின்றீரோ என்று விக்ஞாபித்துக்கொண்டு, குழந்தாய் நீ விருத்தியடையக்கடவாய் நாம் சுகமாக எழுந் தருளியிருக்கிறோம் என உத்திரமளித்தவராகப் பாவித்து ; சுவாமீ ! பூஜை முடியும்வரையில் தேவரீர் கருணையுடன் ப்ரீதி யாக இந்த இலிங்கத்தில் சானித்தியமாக இருந்து என்னால் செய்யப்படும் பூஜையை அங்கீகரிக்கவேண்டும் எனப் பிரார்த் தித்து அவ்வாறே அனுமதித்ததாகப் பாவித்து, சுவாகதார்க்யம் கொடுத்து ஹ்ருதயம் முதலிய அங்கங்களையும் நியாஸம் செய்ய வேண்டும். இதன்பிறகு பாத்யம் முதலானது கொடுத்து புஷ்ப தானம் செய்து தத்துவத்ரயமர்ச்சித்து போகாங்கபூஜை செய்ய வேண்டும். இறைவனுடைய இடது பாகத்தில் மனோன்மணி யைப் பூஜித்து நிவேதனம் முதலான உபசாரங்கள் செய்ய வேண்டும்.

( தொடரும் )



திருநடம்புரியும் பெருமான்

# திருவருட்பயன் விளக்க உரை

( மலர் 29, இதழ் 12, பக்கம் 655 இன் தொடர்ச்சி )

ஒன்பதாவது குறள்,

> " நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
> சலமிலன் பேர்சங் கரன் "

எனவரும்.

இதன் பொருள்: நண்ணினர்க்கு நல்லன் - தன்னை அடைந்தார்க்கு இன்பம் செய்தலுடையவன்; நண்ணார்க்கு நலம் இலன் - தன்னை அடையாதார்க்கு இன்பம் செய்தல் இலனாதல் குற்றம் ஆகாமையின்; சலம் இலன் - அவன் கோட்டம் இலனேயாம். பேர் சங்கரன் - ஆதலின், அவனது பெயர் சங்கரன் ஆதற்கு இழுக்கில்லை.

விளக்கவுரை: சம் + கரன் = சங்கரன். சம் - இன்பம்; கரன் - செய்பவன்.

> " இன்பம் செய்தலிற் சங்கரன், எம்பிரான்
> இன்பம் ஆக்கலின் சம்பு, இடும்பைநோய்
> என்ப தோட்டும் இயல்பின் உருத்திரன் " *

என்னும் காஞ்சிப் புராணச் செய்யுளைக் காண்க.

'இறைவன் இன்பே உருவானவன்' என்பதனை, 'அவ்வாறாயின், அவ்வின்பம் நம்மனோர்க்குக் கிடையாதது என்னை' என்று எழும் ஐயத்தினை, 'அஃது அவனைச் சார்ந்தார் 'அடையத்தக்கதேயன்றிச் சாராதார்' அடையத் தக்கது அன்று' என விடுத்தும், 'அங்ஙனமாயின், அவன் தனது இன்பத்தினை ஒருசாரார்க்கு வழங்குதலும், மற்றொரு சாரார்க்கு வழங்காமையும் ஆகிய கோட்டமுடையன்போலும்' எனப் பின்னும் எழும் ஐயத்தினை, 'யாதொரு பொருளின்பயனும்

---

* பரசிராமேச்சரம் - 44.

அதனைச் சார்ந்தார் பெறுதலும், சாராதார் பெருமையும் இயல்பாதலின், அங்ஙனமே இறைவனது வரம்பில் இன்பமும் அவனைச் சார்ந்தாரால் பெறப்படுதலும், சாராதாரால் பெறப்படாமையும் இயல்பேயாகலின், அது பற்றி அவன் கோட்டம் உடையனுதல் எவ்வாறு' என விடுத்தும் வலியுறுத்து ஓதுவார், சொற்பல்காமைப் பொருட்டு இவ்வாறு ஐயமறுத்தலாக ஓதினர். 'சங்கரனே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தல்.

மழையும், பனியும் உள்வழி அவற்றின் நீங்கித் தீயை அணுகினர் குளிர் நடுக்கம் நீங்கி இன்பம் எய்துதலும், அணுகாதார் அவ்வின்பத்தை எய்தாமையும், வெயில் உள்வழி அதனின் நீங்கி நிழலையும், நீரையும் அடைந்தார் வெப்பம் நீங்கி இன்புறுதலும், அடையாதார் அவ்வின்பம் உருமையும் அவரவர் செயலானே ஆவனவல்லது, 'தீ, நிழல், நீர்' என்பவற்றது கோட்டங் காரணமாக ஆவன அல்ல. அதுபோலப் பாசத்தின் நீங்கி இறைவனைச் சார்ந்தார் பிறவித் துன்பம் நீங்கி வரம்பில் இன்பத்தை எய்துதலும், சாராதார் அவ்வின்பத்தினை எய்தாமையும் அவரவர் செயலானே ஆவனவன்றி, இறைவனது கோட்டங் காரணமாக ஆவன அல்ல என்பார், 'நண்ணினர்க்கு நல்லன்; நண்ணுர்க்கு நலமிலன்; (ஆயினும்) சலம் இலன்' என்றும், 'அவ்வாருகவே அவனை, 'சங்கரன்' என்று உண்மை நூல்கள் கூறுதலை ஏலாது, கோட்டம் உடையன்' எனக் கூறிப் பிணங்குதல் அறியாமைப் பாலாம்' என்பார், "பேர் சங்கரனே" என்றும் கூறினர். இத்தன்மையினை இனிது விளக்க எழுந்ததே பின்வரும் திருப்பாடற்பகுதி;

பொருதிடங் கொண்டு புண்ணியம் புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண,
நின்னது குற்றம் உளதோ! நின்னினைந்
தெண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம்; யாதெனின்,
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்

புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்ற மன்று; வெயிலின்வைத்
தாற்றிய தண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்று; கண்ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை யிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவா னொருவன்
நெடிது வருந்துதல் நிழற்றீங் கன்றே. †

" மனிதர்காள் இங்கே வம்மொன்று
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே " (1)

" கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவை நல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே " (2)

என்றற் றொடக்கத்தனவாக, இறைவன் இணையிலாப் பேரின்ப வடிவினனாதலை அறிவுறுத்துவனவாய் அளவின்றிப் பரந்து வரும் திருமொழிகள் பலவும் அவனைச் சார்தற்கண் மன வெழுச்சி சேரற்கு அருளிச் செய்தனவேயாதல் அறிக.

யாண்டும் ஒருபெற்றியனேயாகின்ற இறைவன் திருமுன் உயிர்கள் நன்மையும், தீமையும் உறுதல் அவற்றது இயல்பான் ஆவனவே; அதனை அறியாது, 'இறைவனைக் கோட்டம் உடையன்' எனக் கூறிப் பிணங்குதல் ஆகாது என்பதனையே திருவள்ளுவர்,

" என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் " *

என்பதனாற் குறித்தார்.

---

† திருமுறை - 11. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-16.
* குறள் - 77.

இதனுல் உயிர்கள் எல்லாவற்ருேடும் உடனுய் நின்று அவற்றை நடத்துகின்ற இறைவன், அவ்வவ்வுயிர்களின் நிலைகட்கு ஏற்பப் பயன் தருதல் கூறப்பட்டது.

பத்தாவது குறள்,

உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து"

எனவரும்.

இதன்பொருள் : ஓவாது மன்னு பவம் தீர்க்கும் மருந்து - ஒழியாது நிலைபெற்று நிற்கின்ற பிறவியாகிய நோயைத் தீர்க்கின்ற மருந்து ஒன்று ; உணர்வாய் உளது - நும் அறிவிற் கறிவாயே நும்முடன் இருக்கின்றது. ஐயம் இலது - மயக்கத்தால் அதன் உண்மையில் ஐயம் கொள்ளவேண்டுவதில்லை. உன்னும் - அதனை அகத்தே நோக்கி உணர முயலுங்கள்.

விளக்கவுரை: 'முயன்ருல் இனிது வெளிப்படும்' என்பது குறிப்பெச்சம். பிறப்பு உயிரைப்பற்றிய காலம் இது என அறியப்படாது, அன்று தொட்டு அதனை விடாதே பற்றி வருதலின், "ஓவாது மன்னு பவம்" என்றும், பிறவியால் வருவது துன்பமேயன்றி இன்பமன்று ஆதலின் அதனை 'நோய்' என்றும், அறிவிலார்க்குப் பிறவி நோய் என்பது தோன்ருவிடினும், அறிவுடையார்க்கு அது நன்கு தோன்றுதலால் அவர் அந்நோயைத் தீர்க்கும் மருந்தை நாடி நிற்றலானும், அம்மருந்து இறைவனையன்றி வேறின்மையானும் இறைவனை, "பவம் தீர்க்கும் மருந்து" என்றும் அம்மருந்து தான் நோயுடையார்க்கு வேருய் இல்லாது அவரோடே ஒன்ருய் இருத்தலின், "உணர்வாய் உளது" என்றும், அவ்வாறு உள்ளதாயினும் அவ்வறிவிலே உள்ள மயக்கம் காரணமாக அது புலப்பட்டிலது ஆதலின் அம்மயக்கத்தை நீக்கவேண்டுதல் பற்றி, "ஐயம் இலது" என்றும், மயக்கத்தை விடுத்து அதனெடு ஒற்றுமைப்பட்டு உணர்தலே அதனைப் பெறும் முறையாதல் பற்றி, "உன்னும்" என்றும் கூறினர். "பவம் தீர்க்கும் மருந்து" என்றது ஏகதேச உருவகம்.

பிறப்பு, தொடங்கிய காலம் அறியப்படாது தொடர்ந்து துன்புறுத்தி வருதலையே மாணிக்கவாசகர் "புல்லாகிப் பூடாய்" எனத் தொடங்கி, "செல்லாஅ நின்றஇத் தாபர சங்கமத்துள் - எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்" † என்றார். பிறவிப் பிணிக்கு மருந்து இறைவன் ஆதலையே திருநாவுக்கரசர்

"மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித் -
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னை *

என்று அருளிச்செய்தார்.

இறைவன் தன்னை உணரப் புகுவார்க்கு வேருய் இல்லா மல் அவர்தம் உணர்வினுள்ளே இருந்து அவர் உணர்வன வற்றையெல்லாம் அறிதலையும், அத்தன்மையை அறிந்து உள்ளம் உருகி அன்பினுல் உணரும் வழியே அவன் வெளிப் படுதலையும். அங்ஙனம் உணர்தற்கு இடையே ஐயம் திரிபுகள் உளவாயின் அவன் மறைந்துபோதலையும் நாவுக்கரசர் பின் வருமாறு அருளிச்செய்தார்.

உள்குவார் உள்ளத் தானை,
உணர்வெனும் பெருமை யானை,
உள்கினேன் நானும் காண்பான்
உருகினேன் ஊறி ஊறி
எள்கினேன் எந்தை பெம்மான்,
இருதலை மின்னு கின்ற
கொள்ளிமேல் எறும்பென் னுள்ளம்
எங்ஙனங் கூடு மாறே. $

'ஐய உணர்வு உடையார்க்கு இறைவனை அடைதல் இயலாது' என்பதனைத் திருவள்ளுவரும்,

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து" ‡

என்றார்.

இதனுல் பதிப்பொருளை உணருமாறும், உணர்ந்தார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

---

† திருவாசகம், சிவபுராணம் - 26 - 31.
* திருமுறை-6. 54. 8.
$ திருமுறை. 4. 75. 6
‡ குறள் - 353.

(தொடரும்)

# செய்திகள்

## திருக்கடவூரில் சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அமிர்தகடேசப் பெருமானுக்கு கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறும்.

சைவ அன்பர்கள் சோமவார நாட்களில் விரதமிருந்து பெருமானை வழிபடுவர். ஆண்டு முழுவதும் சோமவார விரதம் இருக்க இயலாதவர்கள் கார்த்திகைச் சோமவார விரதத்தை மேற்கொண்டு ஆண்டுமுழுவதும் விரதமிருந்த பலனைப் பெறுவர். சிவ ஆலயங்கள் பலவற்றில் இந்தக் கார்த்திகைச் சோமவாரத்தில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். காலனைச் சம்கரித்த தலமாகிய திருக்கடவூரில் இவ் அபிஷேகம் ஆண்டு தோறும் சிறந்தமுறையில் நடைபெறுகிறது.

இவ்யாண்டு 16—11—70, 23—11—70, 30—11—70, 7—12—70 ஆகிய நாட்களில் 1008 சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் திரளாக வந்து வழிபட்டுப் பயன்பெற்றனர். 14—12—70 அன்றும் சங்காபிஷேகம் சிறப்புற நிகழும்.

---

## சோமவார விரதப் பயன்

மந்தரங் காசி யாதிப் பதிகளில் வதிந்து நோற்கத்
தந்திடும் பயனிற் கோடி தழைத்திடு மதுரை தன்னில்
இந்தநல் விரத நோற்போர்க் கதிகம்யா தென்னிற் சோம
சுந்தர னுரிய வார மாதலாற் சோம வாரம்.

அங்கதி னதிகப் பேறுண் டருக்கனின் மதிதோய்ந் தொன்றித்
தங்கிய திங்க ளேனைப் தகுதியி னோற்க வல்லார்க்
கிங்கதி னதிக நீதி யீட்டிய பொருள்கொண் டாற்றும்
மங்கல விரதப் பேறென் றனந்தமாய் வளரு மன்றே.

—திருவிளையாடற்புராணம்,

# எதிர்காலம்

## திரு. K. முத்துஜோதிடர்

(சாதாரணஞு மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய)
( 16—12—70 முதல் 13—1—71 முடிய )

மேற்படி மார்கழி மாதம் முதல் தேதி உதயத்துக்கு முன்பு விருச்சிக லக்னத்தில் லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் தனுர் ராசியில் தனுர்மாத பிரவேசம் செய்கிறபடியாலும், குருபகவான் விருச்சிகராசிக்குப் பிரவேசம்ஆகிவிட்டபடியாலும்' ( கார்த்திகை 18-ல் ) மேற்படி மாதத்தில், முதல் மாதத்தில் ஏற்பட்ட ஈதிபாதைகள் எல்லாம் விலகி சஸ்ய விருத்திகளும் ரோக நிவாரணமும் ஏற்பட்டு விசேஷதர்மம் உள்ள பிரதேசங்களில் விசேஷ நன்மைகளையும் உண்டுபண்ணும்.

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். எல்லாக் காரியங்களும் வெற்றி அடையும். வரவு, செலவு சமமாக இருக்கும். மத்திய காலத்தில் சில வியாதிகளையும், உபாதிகளையும் கொஞ்சம் உண்டு பண்ணும். மேலோர் பெரியோர் ஆசி கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். 15 தேதிக்கு மேல் விசேஷமான நன்மைகளையும் ஜீவன விருத்திகளையும், ஸ்திரமான சுகமான வாசங்களையும் தரும். இல்லறம் ஓங்கும். 15-ம் தேதி வரையில், மிச்ரமாகத்தான் இருந்துகொண்டு இருக்கும். மற்றைய யாவும் சுபமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும் தொழில்நிமித்தமாய் அடிக்கடி மாறுதல்கள் உண்டுபண்ணும்..

எதிர்பாராத செலவுகளும், நஷ்டங்களும் காட்டும். மாதக் கடைசியில் எல்லாம் நன்மையாகவே இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும் சஸ்யதான்யங்கள் விருத்தியாகும். எல்லாக் காரியங்களும் தாமதத்தோடு இஷ்டப்படி நடக்கச்செய்யும். உலகபிரசித்தி ஏற்படும். தெய்வதர்ம காரியங்கள் நன்கு நடைபெறும். தெய்வசக்தி ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். உத்தியோகம் ஓங்கும். இல்லற சுகம் மேன்மை அடையும். ஆரோக்யம் உண்டுபண்ணும். உறவினர்களாலும் சிநேகிதர்களாலும், விசேஷ நன்மை உண்டாகும். இடம் மாறுதல் உண்டு பண்ணும். லாபம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியாராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டு பண்ணும். உலக பிரசித்தியையும், கீர்த்திபத்திரங்களையும் கொடுத்து தெய்வசத்தி முன்னின்று காக்கும். சத்ருக்களுடைய பாதைகள் நிவர்த்தியும், உலகபிரசித்தியும் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தரும். எதிர்பாராத லாபங்களும், கிரய விக்ரயங்களும், தொழில் விருத்தியும் வியாபாரங்களும், உத்தியோகத்தில் விருத்தியும் உண்டுபண்ணும். யாக யக்ஞ பலன்களைத்தந்து தெய்வசத்தி முன்னின்று காக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஜீவனத்தில் அடிக்கடி பல மாறுதல்கள் லாபத்தோடு ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்து சேரும். கிரய விக்ரயங்கள் லாபகரமாக ஏற்படும். வெகுநாட்களாக எதிர்பார்த்து நடக்காமல் இருந்த காரியம் வெற்றியாக நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். இல்லறசுகம் விருத்தியாகும். வரவு செலவு சமமாக இருக்கும். ஈதிபாதைகள் மத்திய காலங்களில் கொஞ்சம் ஏற்படும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பம் ஓங்கும். வெள்ளி, சனிசுபமாகும்.

10. மகரம்– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$.

மகரராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். நிலம் உள்ளவர்களுக்கு சஸ்யதான்ய விருத்தி காரியங்களில் கொஞ்சம் தடங்கல் ஏற்படும். தர்ம பூமிகளில் சஸ்ய தான்யம் விருத்தியாகி நிலம் உள்ளவர்கள் நன்மை அடைவார்கள். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். தூர யாத்திரை உண்டு பண்ணும். ஜீவனசுகமும், இல்லற சுகமும் விசேஷமாகும். ஆஸ்திகம் ஓங்கும். பிரதானமான தொழிற்சாலையில் மேல்பதவி கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஜீவனம் விருத்தியாகும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். தெய்வசக்தி ஓங்கும். யக்ஞயாகாதி பிரதிஷ்டா பலன்களையும் உலக பிரசித்தியையும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளிசுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதத்தில் தனுர்ராசி பிரவேசகால லக்னுதிபதி செவ்வாய் 12 லும், தனுர்ராசி பிரவேசம் செய்த ஸ்ரீசூரியபகவானுக்கு 12ல் குருவும். வக்ரமடைந்த சனிபகவான் செவ்வாய்க்கு 7 லும் அமைந்தபடியால், அநேக தேசங்களில் அனேக அற்புதங்களும், உத்பாதங்களும் பூமி அதிர்ச்சியும் அடிக்கடி உண்டுபண்ணும். ஆஸ்திக மகாஜனங்களும் பக்தர்களும் (சிவகேசவ பக்தர்களும்) சாதுக்களும், மேல்கண்ட தோஷங்கள் வராமல் தடுப்பதற்கு ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் சிவசக்தி, விஷ்ணு ஆலயங்களில் பிரார்த்தனைகளும், உத்பாத கிரஹ சாந்திகளும், பக்தியோடு நடத்திக்கொள்ள சகலமான பயங்களும் நிவர்த்தியாகி தேவகோபம்சாந்தியாகி உலகத்தில் பிரஜைகளிடம் சாந்தியும், சுபிக்ஷமும் உண்டாகும். கடவுள் காப்பார், சுபம் உண்டாகும்.

# நேத்திரமும் நேத்திர மூலிகையும்

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

மருத்துவக்கலை நம் தமிழ் மக்களாகிய மூதாதையர்களிடமிருந்து தொன்றுதொட்டே வந்த தொன்மைக் கலையாகும். கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட அவயவங்களுள் ஒவ்வொரு அவயவமும் முக்கியம் என்று கருதப்பட்டால் கூட அவற்றுள் கண்களையே முக்கிய உறுப்பாக எல்லோரும் கருதிவந்திருக்கின்றார்கள். எண்ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். அதிலும் இரண்டு கண்களும் மிகவும் முக்கியமானவை; அக் கண்களை நாம் வியாதிகளினின்றும் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம் அல்லவா? உடலின் எந்த உறுப்பேனும் சரிவர இயங்கவில்லையென்றால் அதன் காரணங்களை உடனே கண் காட்டிவிடும். அப்படிப்பட்ட உறுப்பாகிய கண்ணின் அமைப்பைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

**கண்களின் அமைப்பு :-**

கண்கள் மண்டை ஓட்டின் முன்பு உள்ள இருகுழிகளிலே புதைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வட்டவடிவமுள்ள ஓர் உருண்டையாக அமைந்துள்ளன. அக் கண்களின் நீளம் $1\frac{1}{2}$'' அதன் அகலம் $\frac{1}{2}$'' அதன் ஆழம் சுமார் $1\frac{1}{8}$'' இவைகள் இவ்வளவு வடிவத்துடன் அமைந்தால்கூட வெளியில் புலப்படக் கூடயது ஒருசிறு பாகம்தான்.

**கண்களுக்குப் பாதுகாப்பாக;**

1. புருவம்:- அவற்றில் உள்ள மயிர் வரிசைகள் கண்களுக்குள், நெற்றியில் ஏற்படும் வியர்வையையும், வெளியிலிருந்து வரும் தூசியையும். விழாமல் பாதுகாக்கிறது.

2. கண்இரப்பைகள் :- கண்களின் மேல்இமையும் கீழ்இமையும் சேர்ந்தது இரப்பைகள் எனப்படும். மேல் இமைக்கு இமை என்றும் கீழ்இமைக்கு "குவளை" என்றும் பெயர். இவைகள் கண்ணிற்குள் அதிக வெளிச்சம் புகாமலும், தூசிகள் விழாமலும் பார்த்துக்கொள்கின்றது.

3. வெள்ளைவிழி :- இது கடினை (Sclera) என்ற ஜவ்வால் ஆக்கப்பட்டது.

4. கருவிழி :- இது வெள்ளை விழியில் மூன்றில் ஒருபாகமாக அமைந்துள்ளது. இது பளுஉள்ள ஒரு (Cormea) என்ற ஜவ்வினல் ஆக்கப்பட்டது. அது வலுஉள்ளதாக அமைந்த காரணத்தினல் கண்கள் அடிபடுவதினின்றும் காக்கப்படு கின்றது.

5. பாப்பா :- இதற்குத் "தாரை" என்றும் ஒரு பெயர் உண்டு. கண்களுக்குப் பார்வையைக் கொடுக்கக்கூடிய இயவம் (Lens) இதில்தான் இருக்கிறது. மிகவும் ஜோதிமயமான பித்தத்தின் சக்தியே பார்வைக்கு ஆதாரமாக விளங்குகிறது. கண்ணின் பார்வைக்குக் காரணமாக இருக்கக்கூடிய பித்தத் தோடு செல்லும் இரத்தக் குழாய்களும் இதில் அமைந்திருக் கின்றன.

கண்களுக்கு வரக்கூடிய வியாதிகளும் அதைத் தடுக்கக் கூடிய முறைகளும் :—

கண்களுக்கு வரக்கூடிய வியாதிகள் 96 வகை என்று சித்த வைத்தியத் தந்தையாகிய அகஸ்திய மகா முனிவர் தாம் எழுதிய நயனவிதி 500 என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றில் ஒவ்வொன்றையும் இங்கு ஆராய்வோம்.

1. அக்கரரோகம் : அதாவது கண்களில் கரகரப்புஉண்டாகி மேல் இமைகள் கனத்துப் புண்கள் உண்டாகும். அதனல் கண்களிலிருந்து நீர் வடியும்; அரிப்பு உண்டாகும். இரண்டு கண்களிலும் பீளை சேரும். முகம் சிவந்து கோபக் குறிகள் காணப்படும். மேல் குறிப்பிட்ட ரோகத்திற்குக் கீழ்க் கண்ட மூலிகையினல் நேத்திர வியாதி 96 ஐயும் குணப்படுத்தக் கூடிய முறையையும் கூறியிருக்கின்ருர்கள்.

அந்த மூலிகைக்கு நேத்திரப் பூண்டு என்றும், சாளேஸ்திர மூலி என்றும், நாலிலை நாகத்தாளி என்றும் பெயரிட்டு அழைத் திருக்கிருர்கள். அதனல் செய்யப்பட்ட தைலங்களை அடிக்கடி கண்களில் இட்டுவந்தால் கண்களில் ஏற்படக்கூடிய 96விதமான ரோகங்களையும் போக்கிவிடலாம்.

# வியாதியஸ்தர் குறிப்பு

வைத்தீஸ்வரன்கோயில்

2—9—1970

நான் ஒருவருட காலமாக முகத்தில், நெற்றி, கண், புருவம், கன்னம், காது ஆகிய இடங்களில் வெள்ளைத்திட்டுகள் இருந்து வந்தது. இந்தநோய்வந்த ஆறுமாதங்களுக்குப்பிறகு உள்ளூர் Goverment Hospital லில் காட்டினேன். அப்போது இருந்த டாக்டர் திரு. P. மணி M. B., B. S., அவர்கள் இது வெண்குஷ்ட சம்பந்தமானது. இதை மாற்றமுடியாது என்றும், பாண்டிச்சேரி கோரிமேடு ஆஸ்பிட்டலில் காட்டிப்பார்என்றும்எனக்குயோசனை சொன்னார்கள். அதன்பேரில் கோரிமேடு ஆஸ்பத்திரிசென்று தோல் சம்பந்த வியாதிகளைப்பற்றி சிகிச்சைசெய்யும் இடத்தில் உள்ளடாக்டர்களைச் சந்தித்தேன். அவர்கள் இதைப்பூரணமாகக் குணப்படுத்த முடியாது என்றும், தற்காலிகமாக மாற்றுவதற்கான Ludermal ( லுடெர்மால் ) என்றஎண்ணெயைக் கொடுத்து இதைத்தடவி வெய்யிலில் இரண்டுநிமிடங்கள் நிற்கும்படிசொன்னார்கள். இதன்படி செய்ததில் அந்த வெள்ளை மாறிவந்தது. ஆனால் மற்றொரு இடத்தில் வந்துவிடும். இவ்வாறாக மாறிமாறி வெள்ளைத்திட்டு உண்டாகிவந்தது.

பின்னர் ஜூன்மாதம் 1969 இல் உள்ளூரிலுள்ள சித்த வைத்திய சாலையில் காட்டினேன். டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன் அவர்கள் சௌகரியப்படுத்திவிடுகிறேன் என்று சொல்லி உள்ளுக்கும், வெளிக்கும் பூச மருந்து கொடுத்தார்கள். ஒரு மண்டலம் சாப்பிட்டவுடன் பூரண குணமடைந்து மனம் நிம்மதியுடனும் உடல் ஆரோக்கியத்துடனும் இருந்துவருகின்றேன்.

இதேபோல் மற்ற நோயாளிகளும் சௌரியம் அடைவதற்கு சித்த வைத்தியசாலை டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் இருக்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

B. Karunanithi
Final B. com.
Annamalai University.

# " ஞானசம்பந்தம் "

## இருபத்தொன்பதாவது ஆண்டு மலர்ப்

## பொருளடக்கம்


எண் — பக்க எண்

அ

1 அக்னி 374, 556, 624, 674
2 அகப்பேய்ச்சித்தர் அருந்தமிழ் 333
3 அருணகிரியார் செய்த அலங்காரம் 12, 112, 153
4 அருள்நெறியும் அறநெறியும் 83, 140, 201, 254, 317, 352
5 அருளொளி 197

இ

6 இந்திரன் 44, 174, 217
7 இறைவனுக்கு எண்ணமென்ன 663

உ

8 உயிருண்ணிப்பத்து ஒருநோக்கு 628

எ

9 எண்ணிய எண்ணங்கள் சொல்லாத சொற்கள் 601, 665
10 எதிர்காலம் 74, 130, 194, 249, 305, 343, 399, 455, 512
575, 639, 689

ஐ

11 ஐவாய் வழிசெல்லும் அவா 483

க

12 கடிதங்கள் 447
13 கரந்துநில்லாக் கள்வன 98

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| | **கா** | |
| 14 | காசியில் கண்ட கண்கொள்ளாக் காட்சி | 656 |
| 15 | காலத்தைவென்ற கவிமன்னன் பாரதி | 568 |
| | **கொ** | |
| 16 | கொழிதமிழ்க்கூடலில் கொன்றைவேணியான் | 37, 116, 165, 213, 272, 338, 362, 423, 487, 531, 616, 659, |
| | **ச** | |
| 17 | சந்தேகமும் சிந்தனையும் | 40 |
| | **சி** | |
| 18 | சித்தாந்த வினுவிடை | 23, 122, 145, 208, 267, 414, |
| 19 | சிரித்தபடி வாராயோ புத்தாண்டே | 265 |
| 20 | சிவாகம சாரசர்வஸ்வம் | 104, 170, 234, 366, 426, 527 |
| | **செ** | |
| 21 | செய்திகள் | 69, 127, 185, 245, 299, 341, 393, 453, 511 570, 634, 685. |
| | **சை** | |
| 22 | சைவசித்தாந்த சாத்திர வகுப்பு | 304 |
| | **சோ** | |
| 23 | சோழநாட்டுத் தலயாத்திரை விபரம் | 63 |
| | **ஞா** | |
| 24 | ஞானக்களிற்றின் முன் மானக்களிறு மண்புற்றது | 692 |
| 25 | ஞானசம்பந்தத்தின் சமயப்பணி | 58 |
| 26 | ,, தமிழ்ப்பணி | 50 |
| 27 | ,, நூல்வெளியீடுகள் | 65 |
| 28 | ஞானசம்பந்தம் இருபத்தெட்டாவது ஆண்டுமலர்ப் | பொருளடக்கம் I |
| 29 | ஞானவாணி | 579 |

எண் பக்க எண்

த

30 தமிழ்நாடு தெய்வீகப்பேரவைத் தலைவர் 120

31 தமிழ்ப் பட்டிமன்றங்கள் ஒரு சிந்தனை 179

32 தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவப் பத்திரிகை I

தி

33 திருத்தொண்டர் வரலாறு 183, 229, 275

34 திருநெறிய தமிழோசை 460

35 திருநெறிய தெய்வத்தமிழ்நாடு 388, 450.

36 திருப்பரங்குன்றத் திருப்புகழ் 221

37 திருமந்திரம் குறிப்புரை 17, 94, 149, 289, 325, 358, 419 491, 534, 620, 677.

38 திருவருள் தலைவர் 347.

39 திருவருட்பயன் விளக்கவுரை 494, 560, 589, 652.

40 திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைவிழா 293, 379.

41 திருவாவினன்குடித் திருப்புகழ் 550.

42 திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி 681

தோ

43 தோத்திரமும் சாத்திரமும் 409, 464, 521, 585, 647,

ந

44 நம்கடன் 3.

நி

45 நிலைவேறுபாடுகள் 108, 156

பா

46 பார்வையாளர் குறிப்பு 463, 482, 526, 537, 549, 564, 567, 574.

47 பாவையும் பாவையரும் 71

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| | பு | |
| 48 | புத்தாண்டு வாழ்த்து | 1 |
| | மா | |
| 49 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை | 565 |
| | மு | |
| 50 | முக்கட்செல்வன் | 133 |
| 51 | முதற்பெருநாள் | 515 |
| | மெ | |
| 52 | மெய்கண்டார் | 430, 470. |
| | வா | |
| 53 | வார்த்தை தடுமாறும் வந்து | 93 |
| 54 | வாழி தைப்பெண் | 77 |
| 55 | வாழியவே | 2 |
| | வி | |
| 56 | விரலுற்ற பாதம் | 403 |
| | வீ | |
| 57 | வீரசோழியம் | 90, 161, 240, 295, 329, 370. 434 |
| | வெ | |
| 58 | வெல்படை ஈந்த விறலோன் | 309 |
| | வே | |
| 59 | வேளூர் இலவச சித்த வைத்தியசாலை | 191 |
| 60 | வேளை வென்ற விமலன் | 253 |
| 61 | ஜோதிர்மகாலிங்கம் | 473 |
| 62 | ஸ்ரீ மெய்கண்டார் | 463 |
| 63 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசியாத்திரை அனுபவங்கள் | 440, 506, 538, 606. |
| 64 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளிய ஆசியுரை | 595 |
| 65 | Extract from the visitors, Book | 373, 378, 323, 324, 220, 248, 252, 169, 193, 103, 119, 121, 129. |

உ
சிவமயம்

# பொங்கல் வாழி!

-: புலவர் வேலன் :-

ஒளிபடர் விடியற் காலம்;
உளமதிற் பத்திப் பாட்டுக்
களிபடர் இன்பப் போது;
கருத்துளே இறைமை கண்ட
தெளிபடர் நிறைவு; வாய்மைத்
திருவுடன் வாழ்வு பொங்க,
உளிபடர் உருவம் போலே
ஒளிர்ந்தது தையாம் திங்கள்! (1)

மார்கழி நிறைத்த பத்தி
மனத்தினில் பெருகி ஓட,
நேர்பெறு முலக வாழ்வு
நிலையதிற் சலித்துத் தேங்க,
கார்பெறு மழையு மாறிக்
கவின்பனி யாடை தூவ,
வேர்பெறு வழியைக் காட்ட
விளைந்ததோ தையாம் திங்கள்? (2)

உழைப்புக்கு மதிப்பைத் தந்தே,
உணர்ச்சிக்கே அடிமை யாகிப்
பிழைக்கின்ற பேய்ப் பிறப்புப்
பின்னிட, உண்மை யோடே
தழைக்கின்ற வீட்டு வாழ்வில்
தருமமே நிலைபெற் றோங்க
அழைத்தனன் தைப்பெண் என்றால்
அக்குரல்கேளீரோ, நீர்? (3)

'சென்றதே நினைத்து நீரும்
சிதைந்திடேல் உள்ளம்; இன்று
நின்றதும், நாளை வாழ்வில்
நிலைப்பதும் கருதி னீரேல்
வென்றவ ராவீர்; வாய்மை
விழுப்பமும் ஓங்கி நிற்பீர்'
என்றனள் தைப்பெண் என்றல்
இக்குரல் கேளீரோ நீர்? (4)

'இளையவர் கல்வி கற்றே
இருந்திடில், பெரியோர் தாமும்
களைகளைய் நன்மை ஓங்கக்
காப்பரே புறநின் றென்றும்;
உளைந்திடும் செயலை யாற்றேல்;
ஒருநெறிக் கல்வி இங்கே
விளைந்திடும்' என்றாள்; இந்த
விழுக்குரல் கேளீரோ நீர்? (5)

வருவது வழக்க மேனும்,
வாழ்வினிற் புதிய ஊக்கம்
பெருகிட வந்தாள் இன்று
பெண்ணிவள் என்றே கொள்வோம்!
திருவுமெய்ப் பொருளும் ஓங்கத்
தெளிவுறும் பொங்கல் வாழி!
உருகிடும் உள்ளத் தோடே,
ஒவிய வாழ்த் துரைப்போம். (6)